Praise ye the Lord

# வேத ஆராய்ச்சியாளர்
# (BIBLE RESEARCHER)

Vol. 2 No. 4

Edited & Published by
S. Raman, Pastor
P. O. Box No. 2
Devadanapatti–626601
Madurai Dist, South India.

Regd No. 299460/'82

பரிசுத்த வேதாகமத்தில் தீர்க்கதரிசன வேதவாக்கியங்களைப் படித்து புரிந்துகொள்வதற்காகத் தயாரித்து வெளியிடப்படும் பத்திரிக்கை.

*Read and pass it on to your friends.*

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# சீர் தூக்கிப் பாருங்கள்

மூன்ருவது வெளியீட்டில் வந்த உயர்ந்து உயர்ந்து மறைந்து விடுதல் என்ற கட்டுரையை வாசித்திருப்பீர்கள் என நினைகிக்றேன். இதை எழுதியதற்கு முற்றிலும் வருந்தாமல் இல்லை. இருந்த போதிலும் சில சமயங்களில், மடமையை மடமையால் வெல்ல வேண்டியது அவசியமாகிறது. கட்டுக்கதைகள் அவற்றின் முழு நீளத்திலேயே திரிக்கப்பட வேண்டும்.

நீ இந்த இடம் வரை என்னுடன் இசைந்து வந்திருந்தால் ..............

நீ இந்த இடம் வரை என்னுடன் இசைந்து வந்திருந்தால், கடந்த காலத்தில் கேள்வியில்லாமலே அல்லது சில கேள்விகளுடன் கிறிஸ்தவர்கள் இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுதல் என்னும் கட்டுக்கதையை ஏற்றுக் கொண் டிருந்தால், இச்சமயத்திற்குள் அவற்றைப் பற்றிய இரண்டாம் பட்சமாய் (1) இக்கருத்து கொண்டு வரும் வேத இயல், வேதவசனப்படியான சிக்கல் (2) அது உள்ளடக்கியுள்ள பழங்காலத்திய நல்ல பொது அறிவை மீறுதல் இவை பற்றிய சிந்தனை எழும்பி இருக்கக்கூடும்.

இந்த அபத்தங்களையும், சிக்கல்களையும், சுட்டிக்காட்டவே முன் அதி காரத்தில் இவை இவ்வாறு எடுத்துச் சொல்லப்பட்டன. இரகசியமாய் எடுத்துக் கொள்ளப்பட்ட பின் வரும் நிகழ்ச்சிகளை நான் ஆராய்ந்து நியாயமான வாதத் திற்கு ஒத்த அந்த முடிவுகளுக்கு வந்தது ஒருவேளை இரக்கமற்ற ஒன்ருகயிருக்க லாம். ஆனல் அவற்றைப் பூரணமாய் நான் தரவில்லை. (உதாரணமாக கிறிஸ் தவனுடைய சவப்பேழையைத் தூக்கிச் சென்றவர்கள் ஒரு வேளை 180 பவுண்டு பாரம் குறைந்ததை உணர்வது என்கின்ற ஒன்றை நீங்களே கூட நினைத்திருக் கலாம்). இந்த அபத்தங்களுக்கு ஒன்றுக்கு மேல் ஒன்ருய் கேலியான பரியாசத் தைக் கூட்டிக்கொண்டே, அடுக்கிக்கொண்டே செல்லலாம். ஆனல் இந்த எல்லா முக்கிய அம்சங்களையும் நாம் சரியாய் நிரூபித்துவிட்டோம் என்று நினைக்கிறேன்.

1. இரகசிய வருகையும் அதோடு சங்கிலி போல் தொடரும் நிகழ்ச்சிகளும் நன்ருய் காணக்கூடிய உலக சரித்திரத்திலேயே இணையற்ற ஒன்ருனதாயிருக்கும்.

2. இக்கட்டுக்கதைகளின் ஆதரவாளர்களால் அண்மைக்காலத்தில் உற் பத்தியாக்கப்படும் கட்டுக்கட்டான இலக்கியங்கள் விரைவில் உலகம் என்ன நடந் தது என்பதை புரிந்து கொள்ள உதவும். 'எனக்கு தெரிந்தமட்டில் இந்த வம் பளப்புக் கதைப்புஸ்தகங்களும். வரைபடங்களும், விசுவாசிகளோடு எடுத்துச் சொல் லப்படமாட்டாது'.

3, உலகத்திற்கும், ஜனங்களுக்கும், அரசாங்கங்களுக்கும் யூகித்துத் திட்ட வட்டமாய் விளக்கங்களோடு எதிர்கால நிகழ்ச்சிகள் கொடுக்கப் பட்டிருக்கின்றபடி யால் இவை முன் கொடுக்கப்பட்டுள்ள அதே ஒழுங்கில் நடக்க அனுமதிக்கப்படுமா

என்பது சந்தேகமே. (எதிர்காலக் கோட்பாட்டாளர்கள் முன் கூறும் நிகழ்ச்சிகள் நடைபெறுது என்பதற்கு அவர்களுடைய சொந்த இலக்கியங்களே அருமையான உத்திரவாதம் ஆகும்)

4. இருப்பினும் இவர்கள் முன்னுரைத்தபடியே சரியாய் நிகழ்ச்சிகள் நடந்தால், அநேக அடிப்படை அஸ்திபாரமான பழம் மரபு சார்ந்த கிறிஸ்தவ உபதேசங்கள் மீறப்பட வேண்டும், அல்லது, தள்ளி வைக்கப்பட வேண்டும். அவற்றுள் மிக முக்கியமானவற்றில் சில :

அ. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை தேவன் தவிர வேறு யாரும் அறியமாட்டார் என்ற கொள்கை. எதிர்காலக் கோட்பாட்டாளர்களின் குறிப்பேட்டிலிருந்து, அவருடைய வருகை ஏழு வருடத்திற்குப்பின் இருக்கும் என்று உலகம் அறிந்துகொள்ளும்.

ஆ. இந்த வெளிப்பாட்டிற்குப்பின் யாருக்கும் இரட்சிக்கப்பட இரண்டாம் தருணம் கிடைக்காது, என்பது உள் இருக்கிறது. ஆனால் இந்த குறிப்பேட்டில் எப்படியிருப்பினும் விசுவாசம் தேவையற்றதாகிவிட்டது; உபத்திரவத்தில் 'மனம் மாறியவர்கள்' விசுவாசத்தினால் அல்ல, தரிசித்தே நடக்கலாம்.

இ. வார்த்தை, பரிசுத்தஆவி இவற்றின் ஊழியத்தால் மட்டுமே சாதகமாய் ஆக்கக்கூடிய ஆவிக்குரிய மறுபிறப்பின் மூலம் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் ஆகிறோம், என்றும் விசுவாசம் சபையில் தங்கியிருப்பவரான பரிசுத்த ஆவி சபையோடு எடுத்துக்கொள்ளப்பட்டபின் பல இலட்சக்கணக்கானவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று நாம் விசுவாசிக்கவேண்டுமென்று இந்தக் குறிப்பு ஏடு நம்மிடம் சொல்லுகிறது.

ஈ. தேவனுடைய இதயத்திற்குக் கிறிஸ்துவை அடுத்து, அருகிலும், அருமையிலும், நித்தியம் எல்லாவற்றிற்கும் சிறந்த வேலைப்பாடு சபை என்றும் விசுவாசத்தை இந்தக் குறிப்பேட்டில் சபை தற்காலிகமான ஒரு கருவி என்றும், இதன் ஊழியம் எதிர்காலத்தில் யூதர்களால் சில வருடங்களுக்குள் கொண்டு வரப்படும் வியக்கத்தகு விளைவுகளால் நிழலிடப்படும் என்றும் சொல்லுகிறது.

கிறிஸ்தவ அடிப்படையான உபதேசங்களை வழக்கிலிருந்து ஒழியச் செய்வதோடு மட்டுமல்லாமல், பொது அறிவின் வரையறையைக் கூட தங்கள் மறை புதிரான கட்டுக்கதைகளால் தாண்டியுள்ளனர்.

சீனாவிற்கும், இஸ்ரவேலுக்கும் இடையில் சுய ஆட்சி உரிமைகொண்ட தேசங்களின் வழியாய் கம்யூனிச சீனா 20 கோடி படைகளை இஸ்ரவேலுக்கு மூன்றாம் உலகப்போரைத் தூண்டிவிடாமல் நடத்திச்செல்ல முடியும் என்று நீ விசுவாசிக்கிறாயா அல்லது அதுதான் அப்படிச் செய்யுமா? இப்படிப்பட்ட பிரயாணத்தில் படையெடுத்து அங்கு செல்ல எவ்வளவு காலம் ஆகும்? அவ்வளவு பெரும்படையை யாரால் அடக்கி ஆள முடியும்? அவர்களுக்கு உணவளிப்பது எப்படி? அவர்கள் விரும்பிய அந்த இடத்தை அடையும்போது அங்கு எவ்வளவு நெருக்கடி இருக்கும் என்பதை உன்னால் கற்பனை செய்ய முடியுமா? ஒவ்வொரு

அமெரிக்க குடிமகனையும் ஒரே சமயத்தில் மேரிலாண்டில் திணிப்பதைக் காட்டிலும் அதிக மோசமான நிலையை உருவாக்கும், சீனாவிலிருந்து வந்தவர்களையும் அவர்களுடைய எதிரிகளையும் ஒன்று கூட்டினால்.

இதற்கு மேல் கர்த்தர் ஆரவாரத்தோடும் (அது எவ்வளவு சத்தம் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா?) பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வரும்போது கர்த்தருடைய வருகையை எப்படி இரகசியமாய் வைக்க முடியும் என்கிற மடமையை முன் அதிகாரத்திலேயே சுட்டிக் காட்டியுள்ளோம். கர்த்தர் தம்முடைய சபைக்காய் வரும் காலம் நோவா, லோத்து இவர்களின் காலத்தில் நடந்ததுபோல நடக்கும். பின்பு கர்த்தருடையவர்கள் அல்லாதவர்களுக்கு ஏழு வருட கட்டுக்கதையான நிகழ்ச்சிகள் நடக்காது, அழிவே இருக்கும் என்பதை மறுபடியும் சுருக்கமாய்க் குறிப்பிட விரும்புகிறோம் (2தெசலோனிக்கேயர் 1:9 குறிப்பிடுவதுபோல, அவர்கள், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும்......நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்)

சபை பரலோகத்திற்கு ஏழு வருடங்கள் சென்றுவிடும் என்னும் அவர்கள் கருத்திற்கு சார்பாய் வேத வசனங்களைத் தேடும் தர்ம சங்கட நிலையில் காலப் பிரிவினைக் கோட்பாட்டாளர்கள் வெளிப்படுத்தின விசேஷம் 4:1-ஐப் பிடித்துக் கொண்டனர். அங்கே ஒரு சத்தம் யோவானை ''இங்கே ஏறிவா'' என்று கூறுகிறது. ''வெளிப்படுத்தின விசேஷம் 6-19 அதிகாரங்களில் விளக்கப்படும் உபத்திரவத்திற்கு முன், சபை எடுத்துக்கொள்ளப்படுவதை உவமான உருவகமாய் இது கூறுகிறது'' என்று இதை குறிப்பிடுகின்றனர். (புதிய ஸ்கோபீல்டின் உதவிக் குறிப்பேடு வெளிப்படுத்தின விசேஷம் 4:1 க்கான குறிப்பு.) இன்றைய கிறிஸ்துவின் உலகளாவிய சபையைக் குறிக்கிறவனாகவா யோவான் இருந்தான்? அல்லது மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்டு, பரதீசுக்குள் எடுக்கப்பட்டு மனுஷர் பேசப்படாததும் வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளைப் பவுல் கேட்டதுபோல் (2கொரிந்தியர் 12:2,4), ''ஆவியிலிருக்கும் போது ஒரே பிரதிநிதியாக வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டானா?'' (வெளிப்படுத்தின 1:10) எப்படியிருந்தாலும், யோவான் கருத்துவமையாய் சபையைக் குறிக்கிறவனாய் இருந்தால், அப்படியே அக்கொள்கையைப் பிடித்துக்கொள்ளுதல், ஏழு வருடங்களும் மகா உபத்திரவமும் முடியும் முன் சபை திரும்ப பூமிக்குக் கொண்டுவரப்படுதலை அவசியமாக்கும் ஏன்? ஏனெனில் வெளிப்படுத்தின விசேஷம் 10-ம் அதிகாரத்தில் பரலோகத்திலிருந்து கீழே செல்லுமாறு சொல்லப்படுகின்றான். ''சமுத்திரத்தின் மேலும், பூமியின் மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக்கொள்'' (வெளிப்படுத்தின 10:8). ''அதோடு நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும்'' (வெளிப்படுத்தின 10:11). ஆகவே சபை, யோவான் சபையைத்தான் உவமானமாய்க் குறித்தால், 6-9 அதிகாரங்களிலுள்ள ஸ்கோபீல்டின் உபத்திரவக் காலத்திற்குத்தான் தப்பியிருக்கும். ஆனால் 11-19ம் அதிகாரங்கள் வரையுள்ள பயங்கரங்களை அனுபவிக்கத் திரும்பவும் பூமிக்கு வந்துவிடும்.

ஒரு வேளை நீங்கள் கூட கோகையும், மாகோகையும் வைத்து எதிர் காலக் கோட்பாட்டாளர்கள் தாங்களே தர்ம சங்கட நிலைக்குள்ளாக தாங்களை ஆக்கிக் கொள்வதைக் கண்டிருக்கலாம். ஆயிர வருட அரசாட்சிக்கு முன், ஏழு வருடங்களின் கடைசிப் பகுதியில் அந்திக்கிறிஸ்துவினால் கோகையும், மாகோகையு மாகிய ரஷ்யரும், அவர்களுடைய கூட்டு நாடுகளும் வேரோடு அழிக்கப்படுவார் கள் என்று சொல்லுகிறார்கள். அப்படியிருந்தும், ஆயிர வருட அரசாட்சிக்குப்பின் கோகையும், மாகோகையும் கடற்கரை மணலத்தனையாய் இன்னொரு யுத்தத்திற்குத் தயாராய் இருப்பதைக் காண்கிறோம். (வெளிப்படுத்தின 20:8)

இப்படி பொது அறிவை மீறியதற்கான அநேக மாதிரிகளை என்னால் தர முடியும். ஆனால் ஏற்கனவே இதை விளங்கிக் கொண்டிராவிடில், தயை அற்ற விதத்தில் அந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டாலும், ஆழ்ந்த அறிவு இல்லாததை இது சரி செய்து விடமுடியாது. அதனால் நாம் பார்த்துக் கொண்டிருந்த இதை விட்டு இன்னும் முக்கிய வேலையான நம்முடைய மூன்று சோதனைகளையும் எதிர் காலக் கோட்பாட்டாளர்களின் போட்டியிலுள்ள முதல் பகுதியாகிய கிறிஸ்துவின் வருகை இரு நிலைகளில் இருக்கும் என்பதோடு பொருத்திப் பார்ப்போம்.

இயேசு தோட்டத்தில் காட்டிக் கொடுக்கப்படுமுன், கடைசி விருந்தைத் தன் சீடர்களோடு உண்டபோது, தன் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, யோவான் 17ம் அதிகாரம் என்று நாம் அறிந்துள்ள விரிவான ஜெபத்தைத் தன் சீடர்களுக்காய் ஏறெடுத்தார். அந்த ஜெபம் அந்த பதினொருவருக்கு மட்டுமல்ல, நமக்கும் தான் என்பது 17:20லிருந்து தெரிகிறது. ''நான் இவர்களுக்காக வேண் டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக் கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.''

இயேசு உலகில் இருந்தபோது, தம்மைப்பின்பற்றினவர்களை பிதாவின் நாமத்தினால் தான் காத்துக்கொண்டதாகவும், இப்பொழுது அவர் போக வேண்டிய காலம் அருகாமையிலிருப்பதால், ''பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றுயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்,'' என்று வேண்டினார் (யோவான் 17:11).

''நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக் கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளு கிறேன்'' (17:15) என்று பின்பு சொன்னார்.

அப்படியிருந்தும் கூட திரளான கிறிஸ்தவர்கள் இன்று, ''பிதாவே, எங்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்,'' என்று ஜெபிக்கின்றனர்.

குறைந்தது நம் அன்றாட ஜெபமானது கர்த்தருடைய ஜெபத்தோடு இசைந்து ஒத்துப்போக வேண்டியது அவசியம் என்று நான் நினைக்கிறேன். யாராவது இருவர் அவர்கள் சம்மதம் இல்லாமல் ஒன்றாய் நடக்கமுடியுமா? இவ்வுலகில் நம்முடைய இடம், நம்முடைய எதிர்பார்ப்பு ஆகியவை பற்றிக் கிறிஸ்துவிடம் உள்ள கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களுக்கு நாம் தஞ்சமளிக்க நமக்கு இடமுண்டா?

நினைவில் வைக்கவேண்டிய அந்த ஜெபத்திற்குமுன், கர்த்தர் தம்முடைய சீடர்களிடம் இன்னும் அநேக முக்கியமான காரியங்களைப்பற்றி பேசினார். அவற்றில் ஒன்று, ''ஊழியக்காரன் தம் எஜமானிலும் பெரியவனல்ல...... அவர்கள் என்னைத் துன்பத்படுத்தினது உண்டானால் உங்களையும் துன்பப்படுத்துவார்கள்'' (யோவான் 15:20). இதன் உட்பொருள் தெளிவாய் உள்ளது—நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடக்கிறோம். அவருடைய பாடுகளில் பங்குகொள்கிறோம். அன்றாடம் அவருடைய சிலுவையை எடுத்துக்கொள்கிறோம். முடிவுபரியந்தம் நிலைத்து நிற்கிறோம். இயேசுவே நம்முடைய மாதிரி—அவர் மரணம் வரைக்கும் கீழ்ப்படிந்ததால், தேவன் அவர் மேன்மையாய் உயர்த்தினார். அவரைச் சூழ்ந்திருந்தவர்களை அழித்து அவரை விடுதலையாக்க, அவரால் 12 லேகியோன் தேவ தூதர்களைக்கூட அழைத்திருக்கலாம். மாறாய், ''அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபிரேயர் 12:2).

அதையே செய்யும்படி நாம் அழைக்கப்படவில்லையா? வரும் சோதனைகளையும் பாடுகளையும் வரவேற்று ''ஒன்றிலும் குறைவில்லாமல் பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி...... விசுவாசத்தின் பரீட்சை பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து, அதை மிகுந்த சந்தோசமாய் எண்ண''வேண்டாமா? (யாக்கோபு 1:2–4). நாம், ''மகிமையின்மேல் மகிமையடைந்து,'' கர்த்தருடைய சாயலில் நம்மை மாற்ற உருவாக்கப்பட்டிருக்கும் காரியங்கள் அவைகள் அல்லவா? (2 கொரிந்தியர் 3:18). நாம் பெறுகிற சிட்சை நம்முடைய நன்மைக்காகவே, அதுவும் அன்புள்ள பிதாவிடமிருந்து வருகிறது என்புதை அறிந்து, தற்பொழுது வருத்தமாயிருப்பினும், ''பிற்காலத்தில் அது நீதியின் கனியாகிய சமாதான பலனைத் தரும்,'' என்று அறிந்து மகிழ்ச்சியுடன் இவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எபிரேயர் 12:1–13 ல் நமக்குச் சொல்லப்படவில்லையா? இவற்றைத் திரட்டிக் கூறுவது என்றால்:

1. ''அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது'' பிதாவுக்குப் பிரியமாக இருந்தது (எபிரேயர் 2:10).

2. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல (யோவான் 15:20). இச்செய்தி தெளிந்த நீரோடைபோல் தெளிவாயுள்ளது. பிதாவாகிய தேவன் தம் குமாரனைப் பூரணப்படுத்த பாடுகளை முன்குறித்தார். அதைப்போல நம்மைப் பூரணமாக்கவும் பாடுகளை முன்குறித்தார். அசுத்தங்களை அகற்றிச் சுத்தப் பசும்பொன்னாய் பிரகாசிக்கச்செய்ய அவர் நம்மை நெருப்பில் இடுகிறார். நாம் எப்படிப்பட்ட மக்களாய் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ, அப்படி நம்மை மாற்றத் தேவையான சூழ்நிலைகளையும், பிரச்சனைகளையும், எதிர்பார்ப்புக்களையும் தந்து, நம்மை ஒழுங்குபடுத்தி நமக்குத் தேவையானவற்றைத் தருகிறார்.

இவ்வித மனத்தெளிவுடன் கிறிஸ்துவின் வருகை இருநிலைகளாய் இருக்கும் என்பதில், முதல் நிலையின்போது பூமியின் பரப்புக்கு வராமல், பூமியில் சுழலிலேயே வந்து, உலகில் அப்பொழுதுள்ள விசுவாசிகளை அழைக்கவரும் முதல் மூன்று சோதனைகளையும் செய்வோம்.

முதலாவது இது கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறதா? அப்படித் தோன்றுவதே அரிதாய் உள்ளது. கிறிஸ்து வெளிப்படுத்தலத்த சபையைக் கண்ட காட்சியில், பயத்திலிருந்து, குழப்பத்திலிருந்து இருளிலிருந்து அழைக்கப்பட்டு, எல்லாமே ஆட்டப்படும் குலுக்கப்படும் இவ்வுலகில், தேவனுடைய ஞானத்திற்கும் வல்லமைக்கும் மாதிரியாய்ப் பிரகாசிக்க பழக்கப்படுத்தப்பட்ட, பெலப்படுத்தப்பட்ட, உறுதியாயிருக்க தலையால் செலுத்தப்பட்ட ஒரு மக்களையே நாம் கண்டோம்.

பலவந்தமும், கொந்தளிப்பும் நிறைந்த யுகத்தின் இறுதிக்குமுன், இந்த ஜனங்கள் உலகிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் இப்பொழுது சொன்னால், நாம் குழப்பத்தையும் கலகத்தையுமே அறிமுகம் செய்வோம். நம்முடைய தேவன் கலகத்தின் தேவன் அல்ல என்பது நமக்குத் தெரியும். இயேசு கிறிஸ்துவின் மீட்பின் வேலை பூரணமற்று இருந்ததால், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் தேவ ஞானத்தை இந்த விசேஷமான மக்களால் செயல்படுத்திக் காட்ட முடியவில்லையா? பைத்தியக்காரத்தனமாய் மாறிவிட்ட உலகில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் மாதிரியாய் கூட இருக்கமுடியாதவாறு தேவனுடைய சர்வாயுத வர்க்கம் தவறானதாயும், இந்தப் படைக்குப் போதுமான போராயுதங்களும் இல்லையா? அப்படியில்லாமல் அவர்கள் அப்படிப் பித்தர்களால் ஆன படையாகிலும் பிறகும், யுத்தத்திற்கு முன் ஏன் அவர்களை அப்புறப்படுத்த வேண்டும்? பிதாவை, ஒரு சந்ததியான விசுவாசிகளை எடுத்துக்கொள்ளும்படி இயேசு இப்பொழுது வேண்டிக்கொண்டதன் மூலம் இயேசுவின் ஜெபம் மாறிவிட்டதா? அல்லது "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" என்னும் சட்டத்தை அது மீறுமா? (ரோமர் 2:11). 1900 வருடங்களுக்குமேல் விசுவாசிகள் பின்பற்றி வந்த மாதிரியைக் காட்டிலும், வேறுபட்ட ஒன்றைப் பின்பற்ற இந்த ஒரு சந்ததியிலுள்ள ஊழியர்கள் மட்டும் அவர்களுடைய கர்த்தரைக் காட்டிலும் பெரியவர்களோ? இப்படிப்பட்ட கேள்விகளை நாம் எழுப்புகிறோம்.

கிறிஸ்து எப்படி மகிமைப்படுத்தப்படுகிறார்? நம்மைப் போல் இயேசு மனித சரீரத்தில் இருந்து "எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும்" (எபிரேயர் 4:15), பிதாவின் சித்தத்திற்கு மரணபரியந்தம் கீழ்ப்படிந்ததாலே, கிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்த பின்னே அவருடைய பிதா அவரை மகிமைப்படுத்தினார், என்று நாம் அறிவோம். அதைப்போல் மகிமையைத் தாம் வெளிப்படுத்த விரும்பிய பெலனற்ற மனித பாத்திரங்களால், தம் வெற்றியான வாழ்க்கையானது வாழப்படும்போது கிறிஸ்து மகிமைப்படுகிறார். இக்காரணத்திற்காகவே பவுலிடம் கர்த்தர், "என் கிருபை உனக்குப் போதும், பெலவீனத்திலே என் கிருபை பூரணமாய் விளங்கும்" என்றார் (2 கொரிந்தியர் 12:9). இதனால், "ஆகையால் கிறிஸ்துவின் நிமித்தம் எனக்கு வரும் பெலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்", என்று சொல்லமுடிந்தது (2 கொரிந்தியர் 12:10).

சிக்கலான சூழ்நிலையைக் கற்றிருப்பதால், கிறிஸ்து மகிமைப்படாமல், அவருடைய ஜனங்களை அச்சூழ்நிலை முழுவதிலும் நடத்திச்செல்லுவதின் மூலமே அவர் மகிமைப்படுகிறார். அந்த மேலான மகிமையை அவர் எப்படிப் பெற்றிருக்

திருப்பார்?- அந்த மூன்று எபிரேயப்பிள்ளைகளை எடுத்துக்கொள்ளுவதன் மூலமாகவா? அல்லது எரிகிற அக்கினிச்சூளையில் அவர்களைப் போட அனுமதித்துப் பின் அவர்களோடு அங்கு நிற்பதன் மூலமாகவா? தானியேலை எடுத்துக்கொள்ளுவதன் மூலமாகவா? அல்லது அங்கு சிங்கக் கெபியிலே அவனைப்போட அனுமதித்துப் பின் சிங்கங்களின் வாய்களை அடைப்பதன் மூலமாகவா?

அல்லது இன்றைய இரத்தச்சாட்சிகளாய் கொடிய கம்யூனிச சிறைச்சாலைகளிலே மரிக்கும் எண்ணிக்கையற்ற நபர்களைப்பற்றி சிந்தியுங்கள். அவர்கள் விடுதலை பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள் வேறு சிலர் நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும், காவலையும் அனுபவித்தார்கள் (எபிரேயர் 11:35-36), என்ற வண்ணமாய் பல நூற்றாண்டுகளில் வாழ்ந்த இரத்தச்சாட்சிகளைப் போல அல்லவா இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்வதைக் காட்டிலும், இவர்கள் சித்திரவதை, மரணம், இவற்றினும் பொறுமையாய் விசுசெயல்படுவதில் கிறிஸ்து அதிகமாய் மகிமைப்படுவாரா! நீ அவர்களுடைய கதைகளில் எதையாவது வாசித்திருந்து, கிறிஸ்து அவர்களுடைய பெலனற்ற உடலைப் பெலப்படுத்தி, தன்னோடு அணைத்துக்கொண்டதைக் கண்டு நீ அழுது, உன் கண்ணீரின் இடையில் ''தேவனுக்கே மகிமை'' என்று கூவியபோது, வந்த விளைவு தான் உனக்குத் தெரியுமே.

ஆகாயத்திற்குச் செல்லும் பிரயாணத்திற்காய் உன் பெட்டி படுக்கைகளை ஆயத்தமாய் வைத்திருக்கவேண்டும் என்னும் கருத்து இன்றும் உனக்கு வேத வசனத்தின்படிச் சரியாய் தோன்றுகிறதா? ஆனால் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் சோதனையில் அது தவறுகிறது என்பது தெரிகிறது.

இரண்டாம் சோதனையைப்பற்றி என்ன? இந்த உபதேசம் சபையை மகிமைப்படுத்துகிறதா?

நாம் மேற்கூறியவற்றிலிருந்தே நமக்கு அதிகமாய் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். தலையாயிருக்கும் கிறிஸ்துவையே அது மகிமைப்படுத்தாவிட்டால், அது உடலாகிய சபையை எப்படி மகிமைப்படுத்தும், என்பதைக் காண்பது அரிதான ஒரு காரியம். இப்படிப்பட்ட தப்பித்துக் கொள்ளுதலின் கதை மிகவும் பரபரப்பு நிறைந்ததாய் இருக்கலாம். அதை வெற்றி என்பதுபோல்கூட ஆக்கிவிடலாம். ஆனால் இது பிரச்சனையை உலகம் சமாளிக்கும் விதம், மாமிசமானது ஒரு பிரச்சனையைச் சந்திக்கும் விதமாகும். அந்த விதம் (வழி) சபையின் வழியாய் இருக்கக்கூடாது.

உலகம் ''ஓடு'' என்று சொல்லுகிறது. சபை ,'நில்'' என்று சொல்லுகிறது. ''தேசத்தைவிட்டு வெளியே நில், ஏனெனில் அங்கு ராட்சதர்கள் இருக்கிறார்கள்'' என்று மாமிசம் சொல்லுகிறது. ''உள்ளே பிரவேசியுங்கள். அவர்கள் நமக்கு அப்பம்,'' என்று சபை சொல்லவேண்டும்.

சபை திடீரெனப் பறந்துவிடும் என்று முன்மொழிதலில் சபைக்கு வரும் அவமரியாதை என்னவெனில் 1) சபையானது தன்னுடைய ஊழியத்தில் தோல்வியுற்றது. 2) சபை செய்யத்தவறிய அந்த சுவிசேஷ ஊழியத்தை இன்னொரு கூட்ட மக்கள் செய்வார்கள் என்று உட்பொருளாய்க் கூறுவதாகும்.

சபையும் (சபையில் தங்குகிறவரான) பரிசுத்த ஆவியும், எடுத்துக்கொள் ளப்பட்டபின்பு, புரட்சி மிகுந்த மனமாற்றப்பட்ட யூதர்கள் தோன்றி, அவர்கள் கோடிக்கணக்கான மக்களை மனந்திரும்புவார்கள் என்று நாம் விசுவாசிக்க வேண்டு மென கட்டுக்கதைக்காரர்கள் கூறுகிறார்கள். இரு ஊழியங்களாகிய வார்த்தை, பரிசுத்த ஆவி இல்லாமல், பாவம் உணர்த்தப்படுதலும், மனந்திரும்புதலும் இல்லை என்றும், இவை இரண்டின் ஊழியத்தாலேயே நாம் மறுபடியும் பிறக்கிறோம் என் றும் இப்பொழுது அதிகமான கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். ''நாம் தரி சித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்,'' என்றும் (2 கொரிந்தியர் 5:7), ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம்'' என் றும் (எபிரேயர் 11:6), மனிதன் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறான் (ரோமர் 3:28) என்றும், நாம் விசுவாசிக்கிறோம். இருப்பினும் உபத்திரவ காலத்தில் மனந் திரும்பியவர்கள் என்று அழைக்கப்படும் இவர்கள், விசுவாசத்தின் தேவையில்லா மல் தரிசித்து நடந்துகொண்டிருப்பார்கள்.

மனந்திரும்பவும், பெலனளிக்கவும், பரிசுத்த ஆவி இல்லாமல், விசுவாசத் தின் தேவை இல்லாமல், யூத சுவிசேஷர்கள் அவர்களுடைய மேசியாவை ஏற்றுக் கொள்ளுதல் என்பது மனத்தின் சம்மதமேயன்றி அது ஓர் ஆவிக்குரிய மறுபிறப்பு அல்ல. அவர்கள் உலகத்திற்குச் செய்யப்போகிறதாகச் சொல்லப்படும் ஊழியம், முதல் நூற்றாண்டின் பரிசேயர்கள், கடலையும், நிலத்தையும் யூதமார்க்கத்தவர் களாய் ஆக்க முற்பட்டது போன்ற ஊழியமாயிருக்குமேயன்றி, மகாகட்டளை யாகிய கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றும் உண்மையான சிஷர்களாய் இருக்க முடியாது.

பரிசுத்த ஆவியின் வல்லமையால் தரிக்கப்பட்டு, விசுவாசத்தினால் கட்டப் பட்ட சபை தன் ஊழியத்தில் தவறிவிட்டது என்றும், பின்பு மனதளவில் ஏற்றுக் கொண்ட ஒரு கூட்ட மனிதர், அதற்காக அந்த பணியைச் செய்வார்கள் என்றும் கூறுதல் ''எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபையை, அவருடைய சிருஷ்டிப்பின் வேலைப்பாட்டிற்கு நேர் எதிரான ஒரு காரியமாய் அது விளங்கும் (எபேசியர். 1; 23).

இப்போது இரு சோதனைகளில் தவறியிருப்பதால், இரகசிய வருகை மூன்றாம் சோதனைக்கு வருகிறது. தனிப்பட்ட விசுவாசியின் ஆவிக்குரிய வளர்ச் சிக்குத் தன் பங்கைத் தந்து, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்ற அவர் களுக்கு உதவி செய்கிறதா !

இதற்குள்ளாய் அதற்கு என்னுடைய பதில் என்னவாய் இருக்கும் என்று நீங்கள் யூகித்திருக்கலாம். உங்கள் யூகம் சரியே. இது விசுவாசியைக் கொள்ளை யிட்டு, இக்கொள்கை, நிச்சயமாய்க் கிறிஸ்துவின் சாயலில் ஒரு பகுதியாயிராத பூரணமின்மைக்கும், தோல்வி மனப்பான்மைக்குமே உதவி செய்கிறது.

பூரணமின்மை ஏன்? சரி, இக்கோணத்தில் இதைப்பாருங்கள். நான் இருக்கப்போகாத ஒரு யுத்தத்திற்கு நான் ஏன் பயிற்சி எடுக்க வேண்டும்? காரியங்கள் சிறிது கஸ்டமாய் இக்கட்டாய் ஆகும்போது, நான் எடுத்துக் கொள்ளப்படுவேன் என்றால், நான் ஏன் யுத்தத்திற்குத் தயாராக வேண்டும்?

வார்த்தையை ஏன் படிக்க வேண்டும்; குயவன் என்னை அவனுடைய சக்கரத்தில் வைத்து, என்னைத் திருகி, உருக்கொடுத்து, அவனுடைய சூளையில் சுட, நான் அனுமதிக்க வேண்டும்; கிறிஸ்துவைப் போல் அல்லாத பண்புகளாய், கர்த்தர் என்னிடம் நடவடிக்கை எடுக்க ஏன் அனுமதிக்க வேண்டும்? எளிதாய் ஒரு நாளில் எடுத்துக்கொள்ளப்பட்டு ஒரு நொடியில் அவருடைய சாயலுக்கு மாறிவிடுவேன் என நான் யூகித்தால், அந்த நாள் வரைக்கும் ஒரு ஆவிக்குரிய குழந்தையாகவே நான் இருப்பேன். 19 நூற்றாண்டுகளில் வாழ்ந்த விசுவாசிகளுக்கு நடந்தது போல, அந்த நாள் என் வாழ்நாட்களில் வராவிட்டால், நான் இறக்கும் போதும் ஒரு குழந்தையாகவே இருப்பேன்.

தோல்வி மனப்பான்மை ஏன்? இரகசிய வருகை என்பது உலக வரலாற்றின் இறுதி ஏழு வருடங்களுக்கு அடையாளமாய் தேவனுடைய கடிகாரம் இயங்க ஆரம்பிக்கிறது, என்பதாலும் இதற்குப்பின் கிறிஸ்து ராஜாவாக வந்து ராஜ்யத்தை அடைய வேண்டியிருப்பதாலுமே. அச்சமயத்தில் மட்டுமே நாம் அவரோடு ஆட்சி செய்ய முடியும் என்று நம்மிடம் சொல்லப்படுகிறது.

இன்னொரு அதிகாரத்தில் நாம் காண்பிக்கப்போவது போல், இது எதிர்காலக்கோட்பாளர்களுடைய கோட்பாடுகளில் மிகவும் கீழ்த்தரமான ஒன்றாகும். கிறிஸ்து ஏற்கனவே ''எல்லாத் துரைத்தனத்திற்கும், அதிகாரத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும்'', மேலாய் ஆண்டுகொண்டிருக்கிறார் (எபேசியர். 1:20), என்று இப்போது சொன்னால் போதும். நாம் இப்பொழுது அவருடன் அமர்ந்திருக்கிறோம் (எபேசியர் 2:6). அதோடு அவருடைய ராஜரீக குடும்பத்தின் அங்கத்தினராய் இருக்கிறோம் (எபேசியர். 2:19). அதோடு ராஜரீக ஆசாரியக் கூட்டமாயும் இருக்கிறோம் (1பேதுரு 2:9). அவர் தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களும் ஆக்கியிருக்கிறார். (கடந்த காலம்; ஏற்கனவே அது செய்யப்பட்டாகி விட்டது). அதோடு அவருடைய கிருபை, நீதி இவற்றின் மூலம் நாம் ஜீவனை அடைந்து ஆளுகிறோம் (ரோமர்.5:17).

நிறுத்துப் பார்த்து குறைவுள்ளதாய்க் காணப்பட்டது என்றே அண்மையில் முளைத்து கண்டுபிடிக்கப்பட்ட இரகசிய வருகையின் உபதேசத்தை நியாயம் தீர்க்க வேண்டும். நம் மூன்று தேர்வுகளிலும் இது முழுமையாய் தோல்வியடைந்து, சுக்கு நூறாய்க் கிழிப்பதற்கே தகுதியுள்ளதாய் இருக்கிறது.

எக்காலத்திலும் வாழ்ந்த எல்லா பரிசுத்தவான்களும் தங்கள் கர்த்தரைச் சந்திக்க மேலே, மேலே உயர்ந்து, 19 நூற்றாண்டுகளுக்கு முன் அவர் வெளிப்படுத்தின அவருடைய மகிமையின் ராஜ்யத்தின் நிறைவுக்காய்க் கர்த்தரை பூமிக்கு வெற்றியின் மகிழ்ச்சிப்பரவசத்தில் கூட்டிக்கொண்டு வருவதே உண்மையான அவருடைய வருகையாகும்.

# அந்திக்கிறிஸ்து - 1975 (Antichrist - 1975)

by G. J. Paxton & Robert D. Brinsmead.

''அந்திக்கிறிஸ்து'' என்ற சரியான வார்த்தையை பரிசுத்த யோவான் மட்டும் தன்னுடைய முதலாம், இரண்டாம் நிருபங்களில் பயன்படுத்தியிருக்கிறார். இருந்தபோதிலும், அப்போஸ்தலனாகிய பவுலும் இதே உருவத்தைப் பற்றித்தான் 2தெசலோனிக்கேயர் 2-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என்று பெரும்பாலானோர்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்த அதிகாரத்தில் பவுலானவர், அந்திக்கிறிஸ்துவைப்பற்றி ''பாவ மனுஷன்'' என்றும், ''அக்கிரமத்தின் இரகசியம்'' என்றும் குறிப்பிட்டு, சபையை எச்சரித்திருக்கிறார்.

அந்திக் கிறிஸ்துவின் இரகசிய உருவம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இதுவரை ஒரு சில உருவங்கள்தான் கற்பனையைக் கிளறித் தூண்டிவிட்டிருக்கின்றன. வேறுபட்ட கிறிஸ்தவ தலைமுறையினர், இந்த உலகத்தின் முடிவிற்கான அடையாளங்களைக் காண அடிவானத்தை உற்று நோக்கியபோது, அந்திக் கிறிஸ்துவை, நீரோ, கான்ஸ்டான்டைன், நெப்போலியன், ஹிட்லர், ஸ்டாலின் போன்ற மனிதர்களில் கண்டுபிடித்ததாக நினைத்தார்கள். உணர்ச்சி ஆர்வம் மிகுந்த வேறு சிலர், டாக்டர் ஹென்றி கிஸ்ஸின்ஜர் தான் வெகு நாட்களாக எதிர்பார்த்த அந்திக் கிறிஸ்து என்று அபிப்பிராயம் தெரிவித்தனர்.

## ஆதி சபையின் அபிப்பிராயங்கள் :

அப்போஸ்தலர்களுடைய மறைவிற்குப் பிறகு, சபையின் மிகப் பெரிய விரோதி, ரோம சாம்ராஜ்யத்தின் விழ்ச்சிக்குப் பிறகு தோன்றுவான் என்று பொதுவாக நம்பப்பட்டது. அந்திக்கிறிஸ்துவானவன் ஒரு விசித்திரமான வனாகவும், கிறிஸ்தவ விசுவாசத்திற்கு விரோதமான, மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டவனாகவும் எண்ணப்பட்டான். அவன் எதிர்காலத்தில் சபைக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவான் என்றும் நம்பப்பட்டான். இப்படி அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய ஆதி சபையின் அபிப்பிராயம், எதிர்காலத்திற்குரியதாகவே இருந்தது. அப்போதிருந்த எதிர்காலக் கோட்பாடு, இப்போது மிகவும் பிரபல்யமாக இருக்கும் எதிர்காலக் கோட்பாட்டிலிருந்து மிகவும் மாறுபட்டதாக இருந்தது.

## சமய சீர்திருத்தவாதிகளின் அபிப்பிராயங்கள் :

பதினாறும் நூற்றாண்டில் நடந்த கிறிஸ்தவ சமய சீர்திருத்த இயக்கத்தால் கிறிஸ்தவ சபை மறுமலர்ச்சி அடைந்தது. இந்த சீர்திருத்த இயக்கத்தில் அநேக கிளைகள் இருந்தபோதிலும், அவர்களுக்குள்ளே அநேக காரியங்களில் கருத்து வேறுபாடு இருந்தபோதிலும், இரண்டு காரியங்களில் அவர்கள் அனைவரும் ஒத்த கருத்துடையவர்களாய் இருந்தார்கள். அவைகள்:

1. ''விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதலின்'' அர்த்தத்தை சமய சீர்திருத்தவாதிகள் ஒன்றுபட்டுப் புரிந்துகொண்டார்கள். அவர்கள், கிறிஸ்தவ இறையியலில் அதனுடைய மையத் தன்மையையும், அதனுடைய தலைமைச் சிறப்பையும் பற்றிகொண்டார்கள்.

இ. ''விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல்'' என்ற மகிமையான சுவிசேஷ சத்தியத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தச் சத்தியத்தைப் பாழ்படுத்துவதுதான் அந்திக்கிறிஸ்துவின் வேலை என்று சமய சீர்திருத்தவாதிகள் ஒன்றுபட்டுப் புரிந்து கொண்டார்கள். அவர்களுக்கு ''விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல்'', என்ற வேதாகம சத்தியம், மிகப்பெரிய சத்தியமாகத் தோன்றியது. இந்த சத்தியத்தை அடிப்படையாக வைத்தே, சபையானது நிற்கவோ, அல்லது விழுந்துபோகவோ செய்யும் என்று அவர்கள் நம்பினார்கள். ''விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல்'' என்ற சத்தியத்தைச் சபையைவிட்டு எடுத்துப்போடுதல் என்பது, சபையின் ஜீவனையே எடுத்துவிடுதலுக்குச் சமமாகும் என்று அவர்கள் நம்பினார்கள். இந்தச் சத்தியத்தைச் சபையைவிட்டுத் திருடுவதுபோல மகா கேடான காரியம் வேறொன்றும் இல்லை, என்று அவர்கள் தீர்மானம் கொண்டார்கள். அவர்கள் காலத்தில் இருந்த மத ஸ்தாபனம் இந்தப் பெரிய வேதாகம உபதேசத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால், மத ஸ்தாபனம்தான் அந்திக்கிறிஸ்து என்று அறிவிக்க ஆரம்பித்தார்கள்.

சமய சீர்திருத்தவாதிகளின் இந்தவகையான துணிச்சலான அறிவிப்பை நாம் பாராட்ட முடியாது. ஏனென்றால், அவர்கள் காலத்தில், ஒரே ஒரு சபை அமைப்புதான் இருந்தது. இது பல நூற்றாண்டுகளாக பூஜித்துப் போற்றப்பட்டு வந்தது. இது பூமியின்மேலுள்ள பரலோகத்தின் வாசலாக இருந்தது. இதை அந்திக்கிறிஸ்து என்று சொல்லுவது, நம்முடைய பெற்றத் தாயையே விரலை நீட்டிக் குற்றப்படுத்துவதைக்காட்டிலும் மோசமானதாகும். ''விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல்'' என்ற சத்தியத்தை எவ்வளவு உறுதியாக அவர்கள் உணர்ந்தார்கள் என்பதை நாம் பாராட்டவில்லையானால், இந்த விசயம் சம்பந்தமான அவர்களது அபிப்பிராயத்தை நாம் பாராட்டமுடியாது.

அந்திக்கிறிஸ்துவைப்பற்றிய சமய சீர்திருத்தவாதிகளின் அபிப்பிராயங்களைப்பற்றி நாம் என்ன நினைத்தாலும், இந்த அபிப்பிராயங்கள் அவர்கள் மத்தியில் ஏறத்தாழ மூன்னூறு ஆண்டுகள் பரவியிருந்தன என்பதையும் நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். தீர்க்கதரிசன வியாக்கியானத்தில், ''சமய சீர்திருத்தவாதிகளின் அபிப்பிராயங்கள்,'' என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவைகள் அவர்கள் மத்தியில் பரவியிருந்தன,

## புரோட்டஸ்டாண்டு சமயத்தின் சீர்திருத்தப் புரட்சிக்கு எதிராகக் கத்தோலிக்க சமயத்திற்குள் எழுந்த சீர்திருத்த இயக்கத்தவர்களின் அபிப்பிராயங்கள்:

சமய சீர்திருத்தவாதிகள், மத ஸ்தாபனம்தான் அந்திக்கிறிஸ்து என்று அறிவித்ததாலும், இதற்கு மாற்றுவகையான வியாக்கியானம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டதாலும், இயேசுவின் சங்கம் (Society of Jesus) என்ற ரோமன் கத்தோலிக்க சபையைச்சேர்ந்த கல்விமான்கள் ஒன்றுகூடி, ஒரு புதிய வியாக்கியான முறையைக் கொண்டுவந்தார்கள். இது, ''எதிர்காலக் கோட்பாட்டாளர்களின் வியாக்கியானமுறை.'' என்று அழைக்கப்பட்டது. இந்தப் புதிய வியாக்கியான முறையின்படி, அந்திக்கிறிஸ்துவானவன், இன்றும் எதிர்காலத்திற்குரியவனாகவே சொல்லப்பட்டான். இந்த வியாக்கியான முறையைக்கொண்டு, போப்

பாண்டவரைச் சார்ந்த சபை அந்திக்கிறிஸ்துவாக இருக்கமுடியாது என்று நிரூபித்துக்காட்டினர். முன்னூறு ஆண்டுகளுக்குப்பின்பு, இதே எதிர்காலக் கோட்பாட்டாளர்களின் அபிப்பிராயங்கள், ஆங்கில புரோட்டஸ்டாண்டு மண்ணில் வேர் கொண்டு, சுவிசேஷக ஸ்தாபனங்களின் மத்தியில் மிகவும் பரவி, இன்று அவை வட்டாரங்களில் சுவிசேஷ மரபுக்கோட்பாட்டின் ஒரு சோதனையாக இருக்கின்றன.

## அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய வேதாகமச் செய்தி:

ரோமன் கத்தோலிக்க சபைதான் அந்திக்கிறிஸ்து என்று அறிவிக்கும் சமய சீர்திருத்தவாதிகளின் அபிப்பிராயங்களுக்கு நாம் சம்மதம் தெரிவித்தாலும், அல்லது அந்திக்கிறிஸ்துவானவன் இனிமேல்தான் வர இருக்கிறான் என அறிவிக்கும் இன்றுள்ள பிரபல்யமான சுவிசேஷக் குழுக்களின் அபிப்பிராயங்களுக்கு நாம் சம்மதம் தெரிவித்தாலும், அந்திக்கிறிஸ்துவைப்பற்றி வேதாகமம் சொல்லும் மிக முக்கியமான செய்தியை இழந்துவிட்ட ஆபத்தான நிலையில் இருக்கிறோம். அந்திக்கிறிஸ்துவை அடையாளம்கண்டுகொள்வதில், சமய சீர்திருத்தவாதிகள் சரியாகவே இருந்தார்கள் என்று நம்மைநாமே திருப்திபடுத்திக்கொண்டால், ஒருவகையான பரிசேயத் தன்னிறைவால், அல்லது புரோட்ஸ்டாண்டு சுயநீதியால் நம்மை நாமே, வேதாகம எச்சரிப்புக்களுக்கு குருடாக்கிக்கொண்ட ஆபத்தான நிலையில் இருக்கிறோம். மேலும் மத்தியகிழக்குப் பிரதேசத்தில், யூதர்கள் மத்தியில் நடக்கும் சம்பவங்களைப் பார்த்து, அந்திக்கிறிஸ்துவுக்காக எதிர்காலத்தை உற்றுநோக்கிக்கொண்டிருந்தாலும், வேதாகம எச்சரிப்புகளுக்கு இன்றும் நம்மை நாமே குருடாக்கிக் கொண்ட ஆபத்தான நிலையில் இருக்கிறோம், எதிர்காலத்தைப்பற்றி அறியும் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் அந்திக்கிறிஸ்துவைப்பற்றி வேதாகமம் சொல்லவில்லை. கிறிஸ்தவ சபையை எச்சரித்து அதைத் தூண்டுவதற்காகத்தான் வேதாகமம் அந்திக்கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லுகிறது. அந்திக்கிறிஸ்துவின நான்கு விதமான விசேஷமான அம்சங்களைப்பற்றி வேதாமம் கூறுகிறது. அவை:-

## 1. அந்திக்கிறிஸ்துவின் மதசம்பந்தமான இயல்பு:

Antichrist (அந்திக்கிறிஸ்து) என்ற வார்த்தையில் வரும் ''Anti'' என்ற கிரேக்க முன்னிடைச்சொல், 'பதிலாக' (in the place of) என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஆதலால் Antichrist என்பது, கிறிஸ்துவிற்குப் பதிலாகத் தன்னை வைக்கும் ஒரு உருவத்தைக் குறிக்கிறது. அவன் கிறிஸ்துவிற்குப் பதிலான ஒரு மாற்று ஆள் அவன் கிறிஸ்துவினுடைய ஸ்தானத்தில் நின்றுகொண்டு, கிறிஸ்துவினுடைய வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறான். இருந்தபோதிலும், அவனுடைய சுவிசேஷம் உண்மையிலேயே வேறொரு சுவிசேஷமாகும். ஜி. சி. பெர்க்கோவர் என்பவர், கிறிஸ்துவின் மறுவருகை என்ற தன்னுடைய புஸ்தகத்தில், ''பகைமையின் மதசம்பந்தமான தன்மை, சமய சீர்திருத்தவாதிகளை முன்பே தனதாக்கிக்கொண்டது. போப்பாண்டவரின் கொள்கைகளுக்கு விரோதமாகமட்டும் அவர்கள் குரல் எழுப்பவில்லை. அவர்கள் சபையின் நலத்தில் அக்கறையும் ஆர்வமும் உள்ளவர்களாக இருந்தார்கள்...... அந்திக்கிறிஸ்துவானவன் மதசம்பந்தமான மேலங்கியை அணிந்திருந்ததால், சீர்திருத்தவாதிகளுக்கு அந்திக்

கிறிஸ்துவானவன் மிகவும் ஆபத்து நிறைந்தவனாக இருந்தான். சமய சீர்திருத்த இயக்கம் நடந்துகொண்டிருந்த சமயத்தில், அந்திக்கிறிஸ்துவானவன் தேவனுடைய ஆலயத்தில், தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கும் விசயம் மிகவும் அபாயமானதாகக் கருதப்பட்டது. தேவனுடைய ஆலயம் எருசலேமில் இல்லை; ஆனால் சபையே தேவனுடைய ஆலயம். அந்திக் கிறிஸ்துவின் தந்திரம் என்னவென்றால், மெய்யான தேவனை தேவ ஆலயத்திலிருந்து துரத்திவிட்டு, அந்த ஸ்தானத்தில் தன்னை வைப்பதாகும்.'' என்று கூறியுள்ளார் (பக்கம் 268, 269).

## 2. அந்திக் கிறிஸ்துவின் தற்போதைய மெய்ம்மை:

''பிள்ளைகளே, இது கடைசிக்காலமாக இருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி, இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிகாலமென்று அறிகிறோம். அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லோரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்'' (1 யோவான் 2:18, 19).

''மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான்'' (2 யோவான் 7).

''அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது......'' என்று என்று அப்போஸ்தலராகிய பவுல் சொல்லி இருக்கிறார். ஆதலால் அந்திக்கிறிஸ்துவை எப்பொழுதும் தற்போதுள்ள மெய்ம்மையான ஒன்றாகவே காணவேண்டும் (கி. பி. 65-லும், கி. பி. 1517-லும், 1975-லும்). அந்திக்கிறிஸ்துவின் தோற்றம் கடைசிக்காலத்திற்குரியதாகவே இருக்கிறது. பரிசுத்த யோவானின் அபிப்பிராயப்படி, கள்ளப்போதகர்களில் வெளிப்பட்டு இருக்கும் அந்திக்கிறிஸ்துவின் ஆவி, கடைசிக்காலத்தின் முன் அறிகுறியாகும். தேவனுடைய ஜனங்கள் கிறிஸ்துவினுடைய வருகைக்காகக் காத்திருப்பதால், அவர்கள் அந்திக்கிறிஸ்து கிரியைசெய்துகொண்டிருக்கும் சமயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

இறுதியாக எதிர்காலத்தில் வெளிப்பட இருக்கும் அந்திக்கிறிஸ்துவை நாம் மறந்துவிடக்கூடாது. எதிர்காலக் கோட்பாட்டாளர்களோடு உள்ள கஷ்டமான நிலைமை என்னவென்றால், அந்திக்கிறிஸ்துவின் தற்போதைய கிரியைகளுக்கு அவர்கள் குருடாய் இருப்பதே ஆகும். புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கிரியைசெய்துகொண்டிருக்கும், அந்திக்கிறிஸ்துவின் கிரியைகளையும், உருவங்களையும் நாம் இப்பொழுது கண்டுகொள்ள முடியாவிட்டால், இனிமேல் எதிர்காலத்தில் இறுதியாக வெளிப்பட இருக்கும் அந்திக்கிறிஸ்துவின் கிரியைகளையும் உருவங்களையும் நாம் எப்படிக் கண்டுகொள்ளமுடியும். காலம் வரும் என்று மட்டும் வேதாகமம் சொல்லவில்லை; காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது என்று வேதாகமம் அறிவித்து எச்சரிக்கிறது.

ஆதிசபை, ''விசுவாசத்தால் நீதிமானுக்கப்படுதல்'' என்ற தெளிவான வேதாகம சத்தியத்தை இழந்துவிட்டபோது, அது இறுதிக் காரியங்கள் சம்பந்தமான தெளிவான தரிசனத்தையும் இழந்துவிட்டது. ''கடைசிக்காலம்'' என்பது வெகுதூரத்திலுள்ள எதிர்காலச் சம்பவமாகிவிட்டது. அதுமட்டுமல்ல, சபையின் மனதிலேகூட எதிர்காலத்திற்குரியதானது. ஆனல், பதினாறம் நூற்றாண்டில், ''விசுவாசத்தால் நீதிமானுக்கப்படுதல்'' என்ற வேதாகமச் சத்தியம் மறுபடியும் கண்டுபிடிக்கப்பட்டபோது, இறுதிக்காரியங்கள் சம்பந்தமான நம்பிக்கை மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. மறுபடியும் சபை, தான் கடைசிக்காலத்தில் இருப்பதைக் கண்டுகொண்டது. ஜி. சி. பெர்க்கோவர் என்பவர், ''......லூத்தர், இறுதிக்காரியங்களில் கோட்பாடு சம்பந்தமான இறுக்கங்களால் தான் சூழப்பட்டிருப்பதாகக் கண்டார். இதன் ஒருபகுதி, அந்திக்கிறிஸ்து சம்பந்தமான காரியங்களாகும். லூத்தரைப் பொருத்தவரை, அந்திக்கிறிஸ்துவானவன், கடைசிக்காலம் சம்பந்தமான தூரத்திலுள்ள உருவம் அல்ல, ஆனல் ஒவ்வொருநாளும் உள்ள ஆபத்தான ஒன்ருகும். ஆபத்தானது எதிர்காலத்திற்காக ஒதுக்கிவைக்கப்படவில்லை, ஆபத்தானது இப்பொழுதே இருக்கிறது என்பது இதனுடைய முக்கிய விசயமாகும். யோவானல் அறிவிக்கப்பட்டிருக்கும், அந்திக்கிறிஸ்து சம்பந்தமான மெய்ம்மை, புதிய ஏற்பாடு அறிவிக்கும் இறுதிக் காரியங்கள் சம்பந்தமான எல்லாக் கோட்பாடுகளோடும் ஒத்திருக்கிறது, அந்திக்கிறிஸ்து சம்பந்தமான புதிய ஏற்பாட்டின் அறிவிப்பு, வெகுதூரத்திலுள்ள எதிர்காலம் சம்பந்தமான ஒரு பொருத்தமற்ற முன்னறிவிப்பு அல்ல; ஆனல் அது எச்சரிக்கையின் அறிகுறியாகும். சபையானது, அந்திக்கிறிஸ்துவை தற்பொழுது சபையின் மத்தியிலுள்ள மெய்ம்மையான ஒன்ருகவோ அல்லது வெகுசீக்கிரத்தில் சம்பவிக்க இருக்கும் அச்சுறுத்தலான ஒன்ருகவோ காணவேண்டும்...... அந்திக்கிறிஸ்துவை அடையாளம் கண்டுகொள்ளவேண்டியது மிகவும் முக்கியமான விசயமாகும். இதை விட்டுவிட்டு, அந்திக்கிறிஸ்துவைப்பற்றி பேசப்படும் மற்ற பேச்சுக்களெல்லாம் ஒன்றுக்கும் பிரயோசனம் அற்ற பேச்சுக்களாகும்.'' என்று கூறியுள்ளார் — I Lid., P.P. 263-268.

## 3. அந்திக்கிறிஸ்துவின் உள்ளான ஆபத்து:

அந்திக்கிறிஸ்துவானவன் சபைக்கு வெளியே உள்ள ஒரு விரோதியாக மட்டும் நினைத்துக்கொண்டிருந்தால், அந்திக்கிறிஸ்துபற்றிய வேதாகம எச்சரிப்பின் மிக முக்கியமான பகுதியை நாம் இழந்துவிட்டவர்களாவோம். அந்திக்கிறிஸ்துவானவன், சபைக்கு வெளியே வாசலில் மட்டும் உட்கார்ந்துகொண்டு இருக்கவில்லை. அவன் சபைக்குள்ளேயே படிப்படியாக புகுந்திருக்கிருன். அவன் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்ட ஓநாய். அவன் பார்வைக்கு ஆட்டுக்குட்டியைப்போல தோற்றமளிக்கிருன். ஆனல் வலுசர்ப்பத்தைப்போல பேசுகிருன். அவனுடைய பேருக்கு ஏற்றுற்போல, அவன் கிறிஸ்துவினுடைய போலித் தோற்றத்தான். அவனுடைய சுவிசேஷம் ஒரு மாற்று சுவிசேஷமாகும். யோவான், பவுல் போன்றவர்களின் எச்சரிப்புக்களின்படி அவன் சபையிலிருந்தே வெளிவருகிருன், என்பது தெளிவு. ஆபத்து சபைக்குள்ளேயிருந்து வருவதால், சபையானது தன்னைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. 1 Lid, P 269.

## 4. அந்திக்கிறிஸ்துவினுடைய மானிட உருவம்:

அந்திக்கிறிஸ்துவைப் பற்றி, விசித்திரமான மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு உருவமாகவே நாம் எதிர்நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தால், அது தவறாகும். அவனுடைய மானிட உருவத்தைப்பற்றித்தான் வேதாகமும் வலியுறுத்துகிறது. அவன் ''பாவ மனுஷன்'' என்று அழைக்கப்படுகிறான். (2தெசலோனிக்கேயர் 2 3). அவன் மனுஷனுடைய இலக்கம் உடையவனாய் இருந்தான் (வெளிப்படுத்தின 13:18). அவன் மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களைக் கொண்டிருக்கிறான் (தானியேல் 7:8). நிச்சயமாக மத சம்பந்தமான அங்கியை அணிந்திருக்கிறான். லூத்தர் அவர்கள் கண்டுகொண்டதுபோல, மதசம்பந்தமான பாவம்தான் பிரதான மானிட பாவம் என்பதை நாமும் கண்டுகொள்ள வேண்டும்.

## இதுவரைக் கண்ட செய்திகளின் சுருக்கம்:

வேதாகமம், அந்திக்கிறிஸ்துவைப்பற்றி, மத சம்மந்தமில்லாதவனாகக் கூறாமல், மத சம்மந்தமுள்ளவனாகவே கூறுகிறது. எதிர்காலத்திற்குரியவனாக மட்டும் கூறாமல், இப்பொழுதும் கிரியை செய்துகொண்டிருப்பவனாகவே கூறுகிறது. புறம்பான ஒன்றாகக் கூறாமல், உள்ளான ஒன்றாகவே கூறுகிறது. அறியப்படாத, மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விசித்திரமான ஒரு உருவமாக கூறாமல், நாம் நன்கு அறிந்த மனிதனாகவே கூறுகிறது. அந்திக்கிறிஸ்துவை, 1975-ல் அடையாளம் கண்டுகொள்வது, ரோமின் மீதோ அல்லது முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் மீதோ கல்லெறிதற்காக அல்ல. நமது வீட்டையும், நமது இருதயங்களையும், நன்கு ஆராய்ந்து, அதனுள் வேதாகம கிருபையின் செய்தியை மாத்திரம், கிறிஸ்துவை மாத்திரம், விசுவாசத்தை மாத்திரம் அனுமதிப்பதற்காகத்தான். கடந்த 10 ஆண்டுகளில் உள்ள சுவிசேஷ மாற்றுப் பொருள்கள் என்ன? சுவிசேஷகர்களாகிய நாம், கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய மகிமையான செயலுக்குப் பதிலாக, எவைகளைப் புகுத்தியிருக்கிறோம். நாம் மிகவும் நெருங்கி பழகியவர்கள் மத்தியில், நாம் ஞானஸ்நானம் கொடுத்து, நாம் உயர்வாக மதித்துக்கொண்டிருப்பவர்கள் மத்தியில், நம்முடைய பரிசுத்தமான பரம்பரையின் ஒரு பகுதியாக மாறிவிட்டவர்களின் மத்தியில், அந்திக்கிறிஸ்துவானவன் கிரியை செய்துகொண்டிருக்கலாம். ஒரு காரியம் மட்டும் நிச்சயம். தெய்வீக போதிப்பால், அந்திக்கிறிஸ்துவின் கிரியைகளை இன்று பகுத்தறியத் தெரியாவிட்டால் நாளைய அவனுடைய வெளிப்பாட்டை பகுத்தறிந்து கண்டுகொள்ளமுடியும் என்பதற்கு எந்தவித நிச்சயமும் இல்லை.

## அந்திக்கிறிஸ்து இன்று கிரியைசெய்துகொண்டு இருக்கிறான்

அந்திக்கிறிஸ்துவின் கிரியைகளை இன்று அடையாளம் கண்டுகொள்வதற்கு முன், இன்னும் ஒரு காரியத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குப் பதிலாகவும், அவருடைய மகிமையான சுவிசேஷத்திற்கு பதிலாகவும் வேறொன்றைக் கொண்டுவருவதுதான், அந்திக்கிறிஸ்துவின் பிரதான வேலையாக இருப்பதால், சுவிசேஷத்தை நன்கு அறிந்திருப்பதின்மூலம் நாம் அந்திக்கிறிஸ்துவை அறிந்துகொள்ளமுடியும். நல்ல நோட்டை நன்கு அறிந்திருந்தால், கள்ள நோட்டை எளிதில் கண்டுகொள்ளலாம்.

**சுவிசேஷம் :** சுவிசேஷம் என்பது இரண்டாம் ஆதாமாகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய செயலைப்பற்றியதான நற்செய்தியாகும். மனித வரலாற்றில் உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் இரண்டு மனிதர்கள்தான். அவர்கள் ஆதாமும், இயேசுகிறிஸ்துவுமேதான். ஆதாம் என்பவன் மனிதவர்க்கத்தின் முதல் தந்தை மட்டுமல்ல அவன் நாம் எல்லாருக்கும் ஒரு விளைவை உண்டுபண்ணினவன் ஆவான். அவனுடைய பாவம் எல்லாரையும் உள்ளடக்கியது. "......ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள்......" (ரோமர் 5:19). அதன் விளைவாக, மானிடவரலாறு முழுவதும் மானிட பாவத்தால் கறைபடுத்தப்பட்டு, எல்லாரும் நியாயப்பிரமாணத்தின் நியாயத்தீர்ப்பின் கீழ் நின்றார்கள். மனித வரலாற்றிலுள்ள யாரும் (இயேசு கிறிஸ்துவைத் தவிர), பரிசுத்தத்திற்கு தேவையான வேண்டுகோளை நிறைவு செய்ய முடியவில்லை. ஏனென்றால், மிகச் சிறந்த பரிசுத்தவான்களின் வாழ்க்கை கூடத் தவறி தேவ மகிமையற்றதாகிவிட்டது.

பாவப்பட்ட மானிட வரலாற்றிற்குள், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை, நம்முடைய புதிய பிரதிநிதியாக இருக்கும்படியாக அனுப்பினார். அவருடைய பெயர் இம்மானுவேல். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். இயேசு கிறிஸ்துவில், தேவன் நம்மோடு, வறுமையிலும், துன்பத்திலும், கவலையிலும், சோதனையிலும், மரணத்திலும் இருக்கிறார். அவர் செய்த மகிமையான காரியங்களை நமக்காகச் செய்தார். நம் நிமித்தம், நாம் ஒவ்வொருவர்பேரிலும் அது செய்யப்பட்டது. அவருடைய பாவமற்ற ஜீவியத்தால், நமக்கான நியாயப்பிரமாணத்தின் தண்டனையை நிறைவேற்றினார். நமது நிமித்தம் அவர் பாவத்தோடு போராடி அதனுடைய வல்லமையை நிர்மூலமாக்கினார். அவருடைய மனிதத்தன்மையில் பிசாசோடு போரிட்டு அவனுடைய வல்லமையை அழித்தார். அவர் மரணத்தை ருசிபார்த்து, அதை ஒழித்துக் கட்டினார்.

"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரித்துக்கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்" (கொலோசெயர் 2:14,15)

கிறிஸ்து தான் செய்தவைகளையெல்லாம் நமக்காகச் செய்தார் அவை நம்முடையவைகளே. அவற்றை நாம் விசுவாசித்துப் பெற்றுக்கொள்ளலாம். அவருடைய வெற்றி நம்முடயவைகளே. ஆதலால், அப்போஸ்தலனாகிய பவுல், ரோமர் 5:18-ல், "......ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று" என்று கூறினார். இயேசு கிறிஸ்துவினுடைய இந்த நற்செய்தியைப்பற்றி ஒருசில காரியங்களை நாம் குறிப்பாகச் சொல்லவேண்டியது அவசியமாகிறது.

1. சுவிசேஷமானது ஒரு வரலாற்றுப்பூர்வமான சம்பவத்தைப் பற்றியதாகும். அது இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்குள் வருவதுபற்றியதாகும்.

(இயேசு கிறிஸ்து நம்முடைய இருதயங்களுக்குள் வருவதுபற்றியதல்ல). அது உங்களுக்கும் எனக்கும் வெளியே ஒருசமயத்தில் நடந்த ஒரு சம்பவமாகும். அது வரலாற்றுப்பூர்வமான உண்மையான சம்பவமாகும். கிறிஸ்தவம் மட்டும்தான் மெய்யான வரலாற்றுப் பூர்வமான மதமாகும். அதுமட்டும்தான் நமக்கு வெளியே நடந்த கெட்டியான சம்பவத்தை ஆதாரமாக வைத்து இரட்சிப்பை அறிவிக்கிறது. சுவிசேஷம் நிச்சயமாக அக உணர்வு நிலைக்குரிய நன்மைகளைக் கொண்டிருக்கிறது. சுவிசேஷத்தை விசுவாசிப்பவர்களின் இருதயங்களில் மாறுதல்களைக் கொண்டுவருகிறது. ஆனால் சுவிசேஷத்திற்குள்ளேயே அக உணர்வு நிலைக்குரிய மூலப்பொருள் இல்லை.

சுவிசேஷம், இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே முப்பத்தி மூன்று வருஷம் வாழ்ந்த பரிசுத்தமான ஒரு புதிய வரலாற்றைக் கவனத்திற்குக் கொண்டுவருகிறது. இயேசு கிறிஸ்துவினுடைய மரணத்தால், தேவன், நம்முடைய பாவ வரலாற்றைத் தண்டித்துப் புறக்கணித்துத் தள்ளினார். அதை இயேசுகிறிஸ்துவோடு அடக்கம் செய்துவிட்டு, ஒரு புதிய வரலாற்றைத் தேவன் கொண்டுவந்தார். அவருடைய குமாரனும், நம்முடைய பிரதிநிதியுமாகிய இயேசு கிறிஸ்துவை அவர் ஏற்று இருப்பதின் அடிப்படையில் மாத்திரம்தான், நம்மை அவர் நீதிமான்களாக ஏற்றுக்கொள்வதாக அவர் நமக்கு இப்பொழுது அறிவிக்கிறார். இரட்சிக்கும் செயல்கள் நிகழ்ந்திருக்கின்றன. மீட்பின் செயல் கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்டு, அவருடைய மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலால் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது என்ற நற்செய்திதான் சுவிசேஷம். தேவனின் விடுவிக்கும் செயல் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; மனித இனம் சுத்தப்படுத்தப்பட்டு, இயேசு கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சுவிசேஷமானது வரலாற்றுப் பூர்வமானது.

சுவிசேஷமானது, ஒரு தனித்தன்மை வாய்ந்த வரலாற்றைப் பற்றியதாகும். கிறிஸ்துவினுடைய சம்பவத்தைப்போன்று இதுவரை வேறொரு சம்பவம் நிகழ்ந்ததுமில்லை. இனிமேல் நிகழப்போவதும் இல்லை. அவருடைய பரிசுத்தமான வரலாறு தனித்தன்மை வாய்ந்ததாகும். மனித வரலாற்றிலேயே கிறிஸ்து மட்டும்தான் பாவமற்றவராக இருந்தார். தனித்தன்மை வாய்ந்த இயேசு கிறிஸ்துவினுடைய பாவமற்ற தன்மையை நாம் ஒருபோதும் சந்தேகிக்கக்கூடாது. உண்மையிலேயே இவர் ஒருவர்தான் முற்றிலுமாக நீதிமானாக இருக்கிறார். பரிசுத்தவான்கள் கூட, கிறிஸ்துவினுடைய ஜீவனை விசுவாசத்தால் நம்பியிருப்பதன் மூலம் மட்டுமே முற்றிலுமாக நீதிமானாக இருக்க முடியும். அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியானவரான கிறிஸ்துவைத்தவிர, வேறு ஒருவரும் அந்த புஸ்தகத்தை திறந்து வாசிக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது. (வெளிப்படுத்தின 5:1-5)

"இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். அன்றியும் எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும்; பாவங்களை ஒருக்காலும் நிவர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்தி வருகிறவனாயும் நிற்பான். இவரோ பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி என்றென்

றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதப்படியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை, ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்'' (எபிரேயர் 10:10-14).

இன்னொரு மீட்பின் சம்பவத்தைத் துவக்க நாம் ஒருபோதும் அழைக்கப்படவில்லை. கிறிஸ்து நமக்காக ஏற்கனவே செய்து வைத்ததோடு எதையும் கூட்ட வேண்டிய அவசியம் இல்லை. எதையும் அதோடு கூட்டவும் முடியாது. ஒரே ஒரு காரியத்தைமட்டும் தேவனே திரும்பவும் செய்யமுடியாது என்று நாங்கள் பயபக்தியுடன் கூறிக் கொள்ளுகிறோம். அதாவது, தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை நமெல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தலை தேவனால் திரும்பவும் செய்ய முடியாது என்று பயபக்தியுடன் கூறிக்கொள்ளுகிறோம். பரிசுத்த பவுல், ரோமர் 8:32-ல், ''...அவரோடே கூட தேவன் மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?'' என்று சொல்லியிருக்கிறான். அதாவது அவரோடே கூட தேவன் மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளியிருப்பதாக அர்த்தப்படுத்துகிறார். தேவன், இதை மறுபடியும் செய்ய முடியும் என்று கூறுவது, முதல்த்தடவையில் தேவன் எல்லாவற்றையும் நமக்கு அருளவில்லை என்று சொல்லுதலுக்கு ஒப்பாகும். ஆனால் அவர் அருளினார். பரலோகம் முழுவதையும் ஒரு ஈவில் வெறுமையாக்கினார். திரண்ட நித்திய அன்பு முழுவதையும் பொழிந்தருளினார். எதையும் ஒதுக்கிவைக்கவில்லை. தந்தருள இருந்த அனைத்தையும் நமக்காக தந்தருளினார். கிறிஸ்துவின் சம்பவம், இனிமேல் திரும்பத் திரும்பச் செய்யத்தக்க காரியம் அன்று. கிறிஸ்துவின் சம்பவம் மறுபடியும் நிகழமுடியாத வரலாறாகும்

தனித்தன்மை வாய்ந்த இந்தச் சம்பவமே, திரும்ப நிகழமுடியாத இயேசு கிறிஸ்துவினுடைய இந்தப் பரிசுத்த வரலாறே, வேதாகம அறிவிப்பின் மையச் செய்தியாக இருக்கிறது. மனித வரலாற்றினுள் தேவனின் இந்தப் பிரவேசம் தான், மனித அவதாரம் எடுத்த தேவனின் வல்லமையான இந்தச் செயல்கள் தான், வியப்பூட்டுகிற மாபெரும் ஒப்புரவாகுதலின் இந்தச் செய்திதான் அப்போஸ்தல செய்தியின் முற்கோட்கருத்து ஆகும். சுவிசேஷப்பிரசங்ாம் என்பது , வாலாற்றுப்பூர்வமான இந்த கிறிஸ்துவின் சம்பவத்தைத் தொடர்ந்து விளக்கிக் காட்டுதலும், அதனுடைய முக்கியத்துவத்தை ஒவ்வொரு இடத்திலும் உள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் படிப்படியாக வெளிப்படுத்திக்காட்டுதலுமாகும். விசுவாசிப்பவர்கள் அனைவரும் அவர்களுடைய விசுவாசத்தின் அடிப்படையில் நீதியுள்ளவர்களாக்கப்படுவதில்லை ; இயேசு கிறிஸ்துவில், தேவன், ஏற்கனவே செய்து முடித்துள்ள இரட்சிக்கும் செயல்களின் அடிப்படையில்த்தான் நீதியுள்ளவர்களாக்கப் படுகிறார்கள்.

## மாற்று சுவிசேஷம் :

மெய்யான சுவிசேஷத்திற்குப்பதிலாக, வேறு ஒரு சுவிசேஷத்தைக்கொண்டு வருவதுதான் அந்திக்கிறிஸ்துவின் வேலையாகும். தனித்தன்மை வாய்ந்த, கிறிஸ்துவின் சம்பவத்தின் மீதும், திரும்பவும் நிகழ முடியாத இயேசு கிறிஸ்துவின் அனுபவத்தின் மீதும், மனிதர்கள் கவனத்தை செலுத்த

விடாமல் செய்து, மற்ற சம்பவங்கள் மீதும் அனுபவங்கள் மீதும் மனிதர்கள் கவனம் செலுத்துமாறு அந்திக் கிறிஸ்துவானன் செய்கிறன். பொதுவாக எதிராளியானவன் நல்லது இருக்கும் இடத்தில், பொல்லாததை வைப்பான். ஆனுல் இந்த் எதிராளியானவன் (அந்திக்கிறிஸ்துவானவன்), தேவ மகிமையின் ஸ்தானத்தில், நலமாகத் தோன்றும் வேறு சிலவற்றைப்பதிலாக வைக்கிறன். உதாரணமாகச் சொல்லப்போனுல், சுயநீதியானது நல்லது தான். தீத்து 2:12-ல் சொல்லப்பட்டிருப்பது போல, விசுவாசிகள், தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ண வேண்டும். இந்த மாதிரி ஜீவனம் பண்ணுவதற்கும், விசுவாசிகள் பலப்படுவதற்கும் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டிருக்கிறர். அவர், விசுவாசிகளில் தங்கியிருந்தால்த்தான், அவர்கள் நீதியாக ஜீவனம் பண்ண முடியும். ஆனுல் வரலாற்றின் இடைநிலைக் காலத்திய சபையின் இறையியலில், இயேசு கிறிஸ்துவின் நீதியின் ஸ்தானத்தில் விசுவாசியின் சுயநீதி வைக்கப்பட்டது சமய சீர்திருத்தவாதிகள், இதை, அந்திக்கிறிஸ்துவின் உபதேசம் என்று கூக்குரலிட்டார்கள். ரோமன் கத்தோலிக்க சபையைச் சார்ந்தவர்கள் குற்றம் சாட்டியது போல, சமய சீர்திருத்தவாதிகள், சுயநீதிக்கு எதிராகக் கூக்குரலிடவில்லை; ஆனுல் சுய நீதியை, கிறிஸ்துவின் நீதி இருக்க வேண்டிய ஸ்தானத்தில் வைத்ததால்தான் கூக்குரலிட்டார்கள். டாக்டர் ஜேம்ஸ் புசனன் என்பவர், ''விசுவாசத்தால் நீதிமானுக்கப்படுதலினி உபதேசம்'' என்ற தன்னுடைய மிகப்பெரிய புஸ்தகத்தில், ''ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தவர்களின் பிழையின் மையம் எதுவென்றல், அவர்கள் கிறிஸ்துவின் நீதி இருக்கவேண்டிய இடத்தில் விசுவாசியின் புதிய பிறப்பை வைத்தலே ஆகும்'' என்று குறிப்பிட்டிருக்கிறர். இதனுடைய அர்த்தம் என்னவென்றல், கிறிஸ்துவினுடைய வரலாற்றுப்பூர்வமான இரட்சிப்பின் செயல்களின் ஸ்தானத்தில் வேறென்றை புதிதாக வைத்தலாகும்.

அந்திக்கிறிஸ்துவானவன் அவனுடைய தந்திரமான மாற்றுச்சுவிசேஷத்தைத் திறமையாகச் செயல்படுத்துவதற்காக, பரிசுத்தமானதையே பயன்படுத்துகிறன். இந்த உலகத்தில், பரிசுத்த ஆவியானவரின் வேலைக்கு மேலாக பரிசுத்தமானது வேறென்றும் இல்லை. திருத்துவத்தின் மூன்றும் ஆளாகிய பரிசுத்த ஆவியானவரைக் கனப்படுத்துவது போல், அந்திக்கிறிஸ்துவானவன் இன்னெரு சுவிசேஷத்தைக் கொண்டு வருகிறன். நாம் நித்திய ஜீவனைப்பெறுவதற்காக நீதிமானுக்கப்படுவதற்கு அடிப்படையாக, கிறிஸ்து நமக்காக செய்து வைத்த செயலுக்குப்பதிலாக, நமக்குள்ளே இருக்கும் கிருபை நிறைந்த பரிசுத்த ஆவியின் செயலை அந்திக்கிறிஸ்துவானவன் வைக்கிறன்.

நமக்குள்ளே இருக்கும் பரிசுத்த ஆவியானவரின் செயல் பெரியதும், மகிமையானதும் ஆகும் (2கொரிந்தியர். 3:18). ஆனுல் அதை சுவிசேஷத்தின் ஸ்தானத்தில் வைக்கக்கூடாது. திருத்துவத்தின் இரண்டாம் ஆளின் (தேவகுமாரனின்) செயலையும், மூன்றும் ஆளின் (பரிசுத்த ஆவியானவரின்) செயலையும் நாம் குழப்பிக் கொள்ளக்கூடாது. கிறிஸ்துவின் செயல் நமக்காக செய்யப்பட்ட செயலாகும். நாம் பங்கேற்காமல், அந்தச்செயல் நமக்காக செய்யப்பட்டதாகும். அந்த நீதியில் நம்முடைய பங்கு ஒன்றும் இல்லை. மேலும் அந்த முற்றுப்பெற்ற வேலை

வின் அடிப்படையில்த்தான் தேவன் நம்மை ஏற்றுக்கொள்கிறார். பரிசுத்த ஆவியானவரின் செயலைப்பற்றி இந்த விதத்தில் கூற முடியாது. அவருடைய செயல் பதிலான செயல் அல்ல.

அவர், நம்மை வாழும்படியாக உயிர்ப்பிக்கும் புதிய கீழ்படிதலின் ஜீவியத்தில் நமக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. அது மட்டும் அல்ல, பரிசுத்த ஆவியானவருடைய செயல் இன்றும் முற்றுப்பெறவில்லை. அநேகருடைய ஜீவியத்தில் அவருடைய செயல் இன்றும் துவங்கக்கூட இல்லை. தேவன் நம்மை ஏற்றுக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவரின் செயல் நமக்கு அடிப்படையாக ஒரு போதும் இருக்க முடியாது. ஆதலால் கிறிஸ்து செய்தது தான் சுவிசேஷம். அதற்கு மேலாக உள்ளது பூரண சுவிசேஷமாகும்.

ஒருவேளை மார்டின் லூத்தர் இன்றும் உயிரோடு இருந்திருந்தால், ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்பாக, ரோமன் கத்தோலிக்க சபையில் எதைச் செய்தாரோ, அதையே இன்று பெரும்பாலான சுவிசேஷ ஸ்தாபனங்களில் செய்திருப்பார், என்று நாங்கள் நம்புகிறோம். சுவிசேஷக் கோட்பாடு, சுய நீதியால் நீதிமானாக்கப்படுதல் என்ற உபதேசத்திற்கு ஆதாவு தெரிவிக்காவிட்டாலும், பெரும்பாலான சுவிசேஷ வட்டாரங்களில், இயேசு கிறிஸ்துவினுடைய நீதியின் மூலம் நீதிமானாக்கப்படுதல் என்ற உபதேசம் வழி விலகிச் சென்று விட்டன என்பதை மறுக்கமுடியாது. காரணம் என்னவென்றால், இன்றைய சுவிசேஷக் கோட்பாடு, சமய சீர்திருத்தவாதிகளின் கோட்பாடுகளுக்கு நெருங்கியிருப்பதைக்காட்டிலும் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தவர்களின் கோட்பாடுகளுக்கு மிகவும் நெருங்கியிருப்பதால்த்தான்.

முதலாவதாக, பரிசுத்த தேவனுக்கு முன்னால், நீதிமானாக்கப்படுதலுக்கான கேள்வி, தற்போதுள்ள பெரும்பாலான சுவிசேஷ வட்டாரத்தில் ஆர்வமுள்ள கேள்வியாக இல்லை (விதிவிலக்கானவர்களுக்காக தேவனை ஸ்தோஸ்திரிக்கிறோம்) ''நான் எப்படித் தெய்வத்தைப் பிரியப்படுத்த முடியும்?'' என்று நாம் அறிய விரும்புவதில்லை. தேவன் என்னை எப்படிப் பிரியப்படுத்துவார்?; என்னுடைய வாழ்க்கையை எப்படிப் பிரகாசிக்கப்பண்ணுவார்?; தேவன், எப்படி எனக்கு மன நிறைவைத்தருவார்? போன்றவைகளைப்பற்றியே நாம் அறியப்பிரயாசப்படுகிறோம். நாம், தேவனை மையமாகக் கொண்ட கேள்விகளை கேட்டுக்கொள்வதற்குப் பதில், மனிதனையே மையமாகக் கொண்ட கேள்விகளையே கேட்டுகொள்கிறோம். தேவனுடைய பரிசுத்த நியமத்தை, தேவன் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அறிவிக்கப்படவில்லையானால், காரியங்கள் மேன்பாடடையாது.

இரண்டாவதாக, சுவிசேஷம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடத்திலும், அது மெய்யாகவே முதலிடத்தைப் பற்றிக் கொண்டிருக்கவில்லை. சுவிசேஷமானது வரலாற்றுப்பூர்வமானது என்று ஏற்கனவே நாம் பார்த்திருக்கிறோம். அதில் அக உணர்வு நிலைக்குரிய மூலப்பொருள் இல்லாவிட்டாலும், புறநிலை உண்மைநிலை

வலியுறுத்துகிற கருத்துக்களை அது கொண்டிருக்கிறது. அது அக உணர்வு நிலைக்குரிய கனியைக் கொண்டிருக்கிறது. சுவிசேஷமானது, அதைக்கேட்டு, அதை விசுவாசிப்பவர்களின் ஜீவியங்களை மாற்றுகிறது. மேலும் ஆண்களுடைய, பெண்களுடைய, இருதயங்களில், அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், போன்றவைகளை உண்டு பண்ணுகிறது. விசுவாசிகளுக்கு அது கொண்டு வரும் அனுபவம் உண்மையானதும், மிகமுக்கியமானதுமாய் இருக்கிறது. ஆனல் வேதாகம முறையும், நோக்கமும், புறநிலை உண்மைநிலை வலியுறுத்தலுக்கு மேலாகஉள்ள வரலாற்றுப் பூர்வமானதையே வலியுறுத்துகின்றன என்பதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நமக்காக உள்ள கிருபையின் நோக்கு, நமக்குள் உள்ள நோக்குக்கு மேலாக எப்பொழுதும் நிற்க வேண்டும். இப்படிச் சொல்லுவது மெய்யான கிறிஸ்தவ அனுபவத்தின் அவசியத்தில் குற்றம் காண்பதற்கு அல்ல. அனுபவமானது எங்கே இருக்க வேண்டுமோ, அது, அங்கே இருக்கும் போது, அதை மெய்யாகவே பெற்று அனுபவிக்க முடியும் என்று அது உறுதிப்படுத்துகிறது. ஒருசமயம், இயேசுவின் சீஷர்கள், தங்களது மிஷனரி ஊழியத்தை முடித்துவிட்டு, சந்தோஷத்தோடே இயேசுவிடம் வந்து, ''ஆண்டவரே, உம்முடைய நாமத்தினலே, பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது,'' என்று தங்களுடைய அனுபவங்களைச் சொல்லிக்கொண்டிருந்தபோது, ''ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காகச் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்திலே எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்,'' என்று இயேசு சொன்னர்.

உளதாயிருக்கிறவைகளை வரலாற்றுப்பூர்வமாக உள்ளவைகளுக்குமேலாக உயர்த்தும்வரை, தெய்வீக ஒழுங்கை தலைகீழாக மாற்றுவதுதான், சபிக்கப்பட்ட மனிதனின் சுபாவம் என்று சபையின் வரலாறு நிரூபித்துக் காண்பித்திருக்கிறது. (இதை இன்னெருவிதத்தில் சொல்லவேண்டுமானல், உன்னில் உள்ளதை, உனக்காக உள்ளதற்குமேலாக உயர்த்தும் வரை). கிறிஸ்தவ மதத்தின் வரலாற்றுப் பூர்வமான மூலப்பொருள் மங்கும்போது, கிறிஸ்தவ செய்தியின் தனிச்சிறப்புத் தன்மை மறைந்துவிடுகிறது. பின்பு, இந்த உலகத்தில் உனக்கு மகிமையான அனுபவத்தைத் தரும் ஒவ்வொன்றும், உனக்குக் கிறிஸ்தவமாக ஆகிவிடுகிறது. மதசம்பந்தமான அனுபவத்தையே, சுவிசேஷமாகப் பிரசங்கித்தால், அதுவே அந்திக்கிறிஸ்துவாகும். ஏனென்றல், அனுபவத்தை, வரலாற்றுப்பூர்வமானதற்கு மேலாக வைக்கும்போது, தெய்வீக ஒழுங்கு தலைகீழாகிறது. இதனுடைய அர்த்தம் என்னவென்றல், மனிதன், தேவனுக்கு மேலாக வைக்கப்படுகிறன் என்பதே ஆகும்.

## அநேக அந்திக்கிறிஸ்துகள்:

அநேக அந்திக்கிறிஸ்துகள் இருப்பதாக அப்போஸ்தலனகிய பவுல் சொல்லுகிறர் (1 யோவான் 2:18). அதாவது, கிறிஸ்துவினுடைய ஸ்தானத்திலேயும், அவருடைய தன்னேறில்லாத இரட்சிக்கும் அனுபத்திலேயும் மனிதனையும் அவனுடைய அனுபவத்தையும் பதிலாக வைக்கும் அநேக வழிகள் இருப்பதாக பவுல் சொல்லுகிறர். அவைகளில் சிலவற்றை இங்கே தருகிறேம்:

கிறிஸ்துவினுடைய நீதி இருக்கவேண்டிய இடத்தில், சுய நீதி இருத்தல்.

இரண்டாம் ஆள்த்தத்துவமாகிய கிறிஸ்துவினுடைய செயலுக்குப் பதிலாக, மூன்றாம் ஆள்த்தத்துவமாகிய பரிசுத்த ஆவியின் செயலை வைத்தல்.

நீதிமானாக்கப்படுதலுக்குப் பதிலாக, பரிசுத்தமாக்கப்படல், அவருடைய பாவமற்ற ஜீவனுக்குப் பதிலாக நம்முடைய புதிய ஜீவன் அவருடைய அனுபவம் மையமாக இருப்பதற்குப் பதிலாக, நம்முடைய அனுபவம் மையமாக இருத்தல்.

நமக்கான தேவனுடைய அன்பிற்குப் பதிலாக, அவருக்கான நம்முடைய அன்பு.

கிறிஸ்துவினுடைய ஒப்புரவாகுதலுக்குப் பதிலாக நம்முடைய ஒப்புரவாகுதல்.

அவருடைய சிலுவையில் அறையப்படுதலுக்குப் பதிலாக, நம்முடைய சிலுவையில் அறையப்படுதல்.

அவருடைய ஒப்புரவாகுதலுக்குப் பதிலாக, நம்முடைய முயற்சியால் அடைய முற்படல்.

அவருடைய இரத்த ஞானஸ்நானம் இருக்கவேண்டிய இடத்தில், நம்முடைய தண்ணீர் ஞானஸ்நானம்.

நம்பிக்கையின் அடித்தளமாக, கிறிஸ்துவோடு உள்ள தேவனுடைய ஐக்கியத்திற்குப் பதிலாக, கிறிஸ்துவோடு உள்ள நம்முடைய ஐக்கியம்.

அவருடைய தெரிந்துகொள்ளுதலுக்குப் பதிலாக, நம்முடைய தெரிந்து கொள்ளுதல்.

தலையாகிய கிறிஸ்து இருக்கவேண்டிய இடத்தில், சரீரமாகிய சபை இருத்தல். இன்னும் பல.

அந்திக்கிறிஸ்துவின் தந்திரம் என்னவென்றால், நல்லவை இருக்கும் இடத்தில் கெட்டவைகளை வைப்பதல்ல; ஆனால் இயேசு கிறிஸ்துவின் மகிமையான செயல்களுக்குப் பதில் நலமாகத் தோன்றும் வேறு ஒன்றை வைத்தலாகும், என்று நாங்கள் மீண்டும் சொல்லிக் கொள்கிறோம். எப்படியென்றால் புதிய பிறப்பு மாறுபட்ட ஜீவியம், சுயத்தை சிலுவையில் அறைதல் போன்றவைகள் நல்ல காரியங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அது மட்டுமல்ல, இந்த மாதிரி அனுபவங்கள் இல்லாமல் ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது. ஆனால் இவைகளை சுவிசேஷமாக அறிவிக்கும்போதுதான், இவைகள் கிறிஸ்தவ அனுபவத்தை இழிவிற்குள்ளாக்குகிறது. ஒரு மெழுகுவர்த்தி, இருட்டு அறையில் கொஞ்சம் வெளிச்சம் கொடுக்கலாம். ஆனால் சூரிய வெளிச்சத்ற்கு முன்பாக, மெழுகுவர்த்தியை ஒதுக்கி வைத்து விடுகிறோம். சூரிய வெளிச்சத்திற்கு முன்னால் ஒரு மெழுகுவர்த்தியை வைத்தால், அதனுடைய வெளிச்சம் நிழலைத்தான் உண்டுபண்ணும்.

சுவிசேஷத்தின் ஸ்தானத்தில், அனுபவத்தை வைத்தல், ராஜ கிரீடத்திலிருந்து, சில முத்துக்களைத் திருடியது போல் மட்டும் அல்ல. அந்த கிரீடத்தையே திருடி, அதை தன்னுடைய தலையில் வைத்துக்கொண்ட குற்றத்திற்கு ஆளாகினான். இதுதான் அந்திக்கிறிஸ்துவின் வேலையாகும். இதுதான் மதப்பற்றார்வம் வாய்ந்த மனிதனின் பாவமாகும். வேதாகம எச்சரிப்புகளை நாம் அசட்டை செய்து விடாமல், அவைகளின்படி நம்முடைய வீட்டையும் இருதயங்களையும் ஆராய்ந்து பாராவிட்டால், நாமும் அந்திக்கிறிஸ்துவின் சதித்திட்டத்தில் பங்கு பெற்றவர்களாகக் காணப்படுவோம். சுவிசேஷ சபையின் இந்தச் சந்ததி, ஒரு பெரிய சுவிசேஷ மறுமலர்ச்சியில் பங்கு ஏற்காவிட்டால், நாம் மிருகத்தின்சொரூபமாகி தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றுவோம். 'கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்'

# SCOFIELD READY - MIX

"Scofield Ready-Mix" is the name of a truck
That mixes cement and delivers the muck.
It turns as it travels while it is still wet,
For soon it is hard as a rock, when set.

Now Scofield's the name of a most popular book,
With many man - made notions in every man – made nook.
Pure scripture is mingled with the thoughts of men,
And truth is traded for tradition, right then. Mat. 15:3

Another Gospel is intruded beside that of yore.
Scofield says about "Gospels", There's four - even more.
A mythical millennium is popularized in this famous book,
With Jews in Jerusalem and such gobble – de - gook. Gal. 1:9

A temple is rebuilt, and a new peace plan,
A new age will dawn for the salvation of man.
The scriptures, you see are meant for the Jew,
For the Church, the scriptures are almost taboo."

Please turn to page one thousand and look - -
He contradicts Jesus in his private book.
On page nine hundred fourteen he does it again;
A "determined" period of time means nothing to him.
(II Peter 1:20. See "The Kingdom of God Fulfilled"
by H. C. Heffren)

Again in Matthew 13:30 you'll see
He refutes the Lord Jesus without apology.
The tares are gathered first to be burned;
Scofield says "First means last, the way I learned"

Now to find fault with Jesus is plain to me,
Is to be sick, unwholesome and stupid you see.
For Jesus' words are purified in the fire,
And to contradict Jesus is to be found out
(Prov. 3:5,6; 1Tim 6:3-5; Psa. 12:6; Rev. 19:10)

As a student of Darby, Scofield was simply supreme,
The Scofield Bible today is held in high esteem.
In six weeks time ... without studying at all,
You can become much wisher than Daniel or Paul,

Now Scofield began at the back of God's Book,
Found "1000 Year Reign" ... and gave if a long look.
From that he wove a most wonderful skein,
Then up and pulled the wrong end of the string! Rev. 20:2

The Pharisees too had the same thing in view
... who resemble the Jew
... பிரசங்கிக்கப்பட வேண்டியது தேவனுடைய சத்தமு...
அவருடைய நாமத்தினாலே

# An Examination of D

Compiled by

Dispensational — Futurism

**What is the Christian's Hope?**

Dispensationalism — Futurism — Literalism — Judaism —

Based upon the books and writings of men.

A FUTURE JEWISH EARTHLY HOPE — "Palestine, the Holy Land is also still God's chosen land and there can be no peace in this world until the Nation and the Land are fully united. The key to lasting peace is the Land of Israel." (Prophetic Nuggets, by M. R. De Haan, page 17).

Dispensational — Futurism teaches the:

1—RAPTURE OF THE CHURCH (SECRETLY)—Scofield, page 1228. Return of Lord by Pinch, page 9. Emmaus — Bible Prophesy, page 36

2—Return to earth seven years later — Israel in Prophecy, by Walvoord, page 109; Pinch, page 32; Scofield, page 914; The Lord is coming, by Ferguson, page 29.

3—Re-call of Holy Spirit—Scofield, page 1272; Book of Revelation, by W. Lamb, page 127; Larkin — Dispensational Truth, page 16; Emmaus on Holy Spirit, page 31.

4—Rise and reign of "anti-Christ" Scofield 915 (Dan 9:27); Emmaus in Bible Prophecy, page 40; Israel in Prophecy, Walvoord, page 109.

5—Regeneration of whole world by sight at Christ's Coming — Prophetic Nuggets, page 89; Emmaus Studies, page 48-19: Scofield 977.

6—Re-conciliation of Jews to God at Christ appearing. Scofield 974, 976, 977, 1204(7), page 157(2).

7—Repossession of Palestine — (Jewish) Prophetic Nuggets, page 17; Scofield 157(2), 977 (c)(f); 1341 Prophecy's Last Word, by Tatford, page 251.

8—Re-establish Jewish Kingdom—Scofield, page 977 (c) (f), page 1206 (4), 1226, 1227 (6); Lord is Coming, by Ferguson, page 34.

9—Re-gathered Israel — Scofield, page 157 (2); Lev. 23:23-25; Scofield, page 977, Israel in Prophesy, page 78.

10—Re-built Jewish Temple—Scofield 885-892; Prophetic Nuggets (Ironside)

As Millennialists [illegible]
A political plan, and as sinister too,
A long-ranged one which Satan well knew.

The god of the millennial myth is asleep at the switch;
Or he's travelling in space with the 7-year itch ...
Or his rapture has ruptured and he cannot peep ...
Or he's lost his last marble, and is ready to weep.

Yes, the "Scofield" bible is a dangerous book,
With "helps" that really hinder in every nook.
Sacred scriptures are separated, quartered and torn.
From the spiritual meaning, the truth is all shorn.

Fred G. Bennett.

சுவிசேஷ மறுமலர்ச்சியில் பங்கு ஏற்காவிட்டாலும், நிறைவேற்றுவோம் ... 'கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்'
கதரிசனத்தை நிறைவேற்றுவோம்.

# Dispensational - Futurism

H. C. MARTIN

## THE WORD OF GOD

## WHAT ARE CHRISTIANS TO LOOK FOR?

Christianity — Historical — Orthodox — Conservative

Base upon The Word of God; Apostles Creed; Confessions of Faith; A Heavenly Hope; A present expectation and experience of all believers; My Peace; John 14:27; Gal 4:24-26

"We according to His promise look for a New Heavens and a New Earth wherein dwelleth righteousness." 2 Peter 3:13.

"We look for the Saviour the Lord Jesus Christ" Phil 3:20-21; Titus 2:13; 1 Thess 1:10; 1 Cor 1:7; Rom 8:23.

1—Not Secret — 1 Thess 4:13-17; 2 Thess 1:7-10; 2:8 Rev 1:7; Matt 13:41-43; John 6:39-54, 12:48; 2 Tim 4:1-8; Luk 13:23-27.

2—One Coming Only — Heb 9:28; Matt 24:26-27, 37-39; 1 Thess 3:13, 4:15-18; Matt 25:1-12; 13:24-30; 36-12; 2 Thess 17-10; 1 Cor 15:51-58.

3—Holy Spirit abides Forever — John 14:16-18; 16:7-15; 1 Cor 6:19; Gal. 5:22-23.

4—Christ the Messiah and New Covenant — Dan 9:27; Matt 26:28; Matt 23:38-39; Heb 8:8-10; 9:12, 24 10:9, 2 Thess 2:1-10.

5—By Grace through Faith Alone — Rom 5:1; Eph 2:8-10, Acts 16-31; 2 Cor 5:17, 6:2 — Justification by Faith.

6—Reconciliation by blood only — Rom 5:9, Col 1:14; Rev 5:9; Rom 9:6; Rom 11:7; 2 Cor 6:2.

7—New Heaven a New Earth — 2 Peter 3:10-13; 1 Peter 1:4; Col 1:12-13; Eph 2:6; Heb 11:13-16; Phil 3:10; Rev. 21:5; Ish 62:2, 65:15.

8—Christ's Kingdom Eternal and Spiritual — John 3:3-5, 18-36; 1 Cor 15:42-50; Col 1:12-13; Matt 12:28; 21:43-45; Luke 17:20-21; Rom 14:17-18;

9—New Israel (The Church) — Ish 62:2, 65:15; Gal 3:16, 28-29; Eph 2:20-21; Rom 2:28-29, 4:13-14, 9:6-8; Col 3:10-11; 1 Pet. 2:7-10.

10—God's Temple — Eph 2:19-20; 1 Cor 6:19-20; 2 Cor 5:1 Acts 7:48-49 Rev. 21:3.

அவருடைய நாமத்திலே பிரசங்கிக்கப்பட வேண்டியது

# THESE FUNNY FUNDAMENTALISTS

These Fundamentalists are as funny as funny can be,
Believing one - half they hear, and nothing they see;
They oppose themselves fundamently and plain,
Saying Jesus is coming back again, again and again:

Christ's second coming, you see, is not two, but three,
(Which seems so funny to people like me.)
Then, seven years after the end of time,
Is a 1000 year reign with things sublime;

But God has His King on His Holy Hill,
The world knows Him not, tho" He ruleth still;
This Gospel age is the very last age,
At His coming again, it's too late to be saved.
("2 Cor- 6:a; 2Thes. 1:7-9)

So, "The World Tomorrow" is a world too late,
Salvation is today – let's get it straight!
The flesh - profiteth naught, be it Jewish or no,
God's no respector of persons, Jesus told us so.

Scofield's design is to divide the truth aright,
He sure enough divides it - clear out of sight;
In place is projected his millenial scheme,
By reverting to the old Talmudic theme.

So the Scofield Bible is rightly named,
It's his, not God's work, that's blamed;
But Jesus is robbed of His glory and fame;
By denial His present Kingdom and reign.

The prophetic clock of Scofield is not for me,
I refuse to set my time by thee;
For much of the present frenzy and fright,
Is because you have put darknes for light.

The Bible is divided and quartered, and torn,
From rhe prophets own meaning - the truth is all shorn;
Tradition is taught for God's Word, you see;
And a hodge - podge is invented dispensationally.

கதரிசனத்தை நிறைவேற்றுவோம். 'கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்'

# வெளிப்படுத்தின விசேஷம் இருபதாம் அதிகாரத்திலுள்ள முதல் பத்து வசனங்களை எப்படிப் புரிந்துகொள்வது?

(Rev. 20:1-10)

சாத்தான் கட்டப்படுதலின் அர்த்தம் என்ன? இந்த அதிகாரத்திலுள்ள 1-3 வசனங்களில், ஒரு தூதன் (அதாவது தேவன் அனுப்பிய தூதன்) பாதாளத்தின் திறவுகோலையும், பெரிய சங்கிலியையும் தன் கையில் பிடித்துக்கொண்டு, வானத்திலிருந்து இறங்கி வந்ததாக, நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 1:18-ம் வசனத்திலிருந்து, யார் இந்த தேவன் அனுப்பிய தூதன் என்று அறிந்துகொள்ளுகிறோம். இங்கே, தேவ குமாரன், நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்,'' என்று சொல்லியிருக்கிறார். அதாவது, சாத்தான் மேலும் நித்திய மரணத்தின்மேலும் வல்லமை உடையவனாக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். மேலும், சாத்தானைக் கட்டியிருக்கும் சங்கிலி இரும்பினாலோ அல்லது பித்தளையினாலோ ஆன சங்கிலியாக இருக்கமுடியாது; ஏனென்றால் சாத்தான் ஆவியாக இருக்கிறான். ஆவியாக இருக்கும் சாத்தானை இந்தவகையான சங்கிலியால் கட்டமுடியாது. ஆதலால் சாத்தானை சங்கிலியால் கட்டிவைத்தல் என்பது உவம உருவகமான பாஷையாகும்; இதனுடைய அர்த்தம் என்னவென்றால், சாத்தானுடைய வல்லமை அகற்றப்பட்டிருக்கிறது என்பதாகும். இங்கே, தேவன், உவம உருவகமான பாஷையில் சொல்லியிருப்பதை, வேதத்திலுள்ள மற்ற இடங்களில், தேவன் தெளிவான வார்த்தைகளில்ச் சொல்லியிருக்கிறார். அதாவது பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கும், (1யோவான் 3:8). சர்பபத்தின் தலையை நசுக்கவும் (ஆதியாகமம் 3:15), பலவானைக் கட்டவும் (மத்தேயு 12:29), பிதாவினால், தேவகுமாரன் இந்தப் பூமிக்கு அனுப்பப்பட்டார். நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்ததால், பிசாசின் வல்லமை அவனிடமிருந்து அகற்றப்பட்டதாலும் (எபிரேயர் 2:14, 15), இந்த உலகத்தின் அதிபதி நியாயம் தீர்க்கப்பட்டு புறம்பாக தள்ளப்பட்டதாலும் (யோவான் 12:31; 16;11), இது முழுமையாக நிறைவேற்றப்பட்டாகிவிட்டது சாத்தானுக்கு இனிமேல், ஜனங்கள்மேல் எந்தவித வல்லமையோ அதிகாரமோ கிடையாது (வெளிப். 12:10,11) எல்லா ஜனங்களும், இருளைவிட்டு ஒளியிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கும், சுவிசேஷத்தால் அழைக்கப்படுகின்றனர் (அப்போஸ்தலர் 26:18). இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரையும் சாத்தான் பிடித்துக்கொள்ள முடியாது. அதற்கு மாறாக, இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டவர்கள் ஒவ்வொருவரும், இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள் (கொலோசெயர் 1:13). மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி, சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியது தேவனுடைய சித்தமும்

நோக்கமுமாய் இருப்பதாலும், சாத்தான், ஆயிரம்வருஷ கால அளவு கட்டப்பட்டிருப்பதாலும், சாத்தானல், வெற்றிகரமான சுவிசேஷ ஓட்டத்தை தடுத்தோ அல்லது முட்டுக்கட்டை போட்டோ ஜனங்களை மோசம்போக்க முடியாது. கிறிஸ்துவினுடைய கட்டளையின்படியும், சித்தத்தின்படியும் ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம்; பூமியெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும் (மத்தேயு 24:14). சாத்தான் கட்டப்படுதல், பாதாளத்தில் தள்ளி அடைக்கப்படுதல் போன்றவற்றை அப்படியே எடுத்துக்கொண்டு, சாத்தான் இனிமேல் ஜனங்களை நெருங்கி அவர்களை சோதிக்கமுடியாத அளவிற்கு பூமியிலிருந்து அகற்றப்பட்டிருக்கிருன் என்று நாம் அர்த்தம் கொள்ளக் கூடாது. ஏனென்றல், ''தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள்; விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிருன்; விசுவாசத்தில் உறுதியாய் இருந்து. அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்தில் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே'' என்று 1பேதுரு 5:8, 9 வசனங்களில் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். பேதுருவினுடைய இந்த தெளிவான வார்த்தைகளின்படி, நமக்கும், நமது சகோதரர்களுக்கும், இந்த உலகத்தில் இருக்கும்வரை, சாத்தானிடமிருந்தும், எல்லா அசுத்த ஆவிகளிடமிருந்தும் சோதனைகள் உண்டு. கர்த்தர் இந்த உலகத்தை நியாயம் தீர்க்க வரும் நாள்வரைக்கும் உள்ள எல்லாக் கிறிஸ்தவர்களும் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாக இருக்க இந்த எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருப்பதை 2தெசலோனிக்கேயர் 5;1–8 வசனங்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளுகிறோம். ஏனென்றல், கர்த்தரின் நாள் என்பது மகா நியாயத்தீர்ப்பு நாளே தவிர வேறென்றும் இல்லை. அதாவது எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருக்கும்படியாக, நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுதலின் நாளாகும் (2தெசலோனிக்கேயர் 2:1; 1தெசலோனிக்கேயர் 4:17). ஆதலால் இனிமேல் எதிர்காலத்தில் சாத்தான் கட்டப்படப்போவதில்லை; ஏற்கனவே அவன் கட்டப்பட்டிருக்கிருன். சாத்தான் மேலும் அவனுடைய தூதர்கள் மேலும் நியாயத் தீர்ப்பு கடைசி நாளில் முழுமையாக நிறைவேற்றப்படும். அந்நாள்வரை அவன் கட்டப்பட்டிருக்கிருன்.

சாத்தான் விடுதலையாகுதல்: முடிவு வருவதற்கு முன்பு கொஞ்சகாலம் சாத்தான் விடுதலையாகவேண்டும். சாத்தான் விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும், மாகோகையும் மோசம் போக்கும் படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும் படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைத்துக்கொண்டார்கள் (வெளிப்படுத்தின 20:3,8,9). அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது இது நிகழும். அதாவது, சுவிசேஷம் பரவுவதை நிறுத்த சாத்தானுக்கு வல்லமை இல்லாத காலம் முடியும்போது, அதற்குப்பிறகு அவன் கொஞ்ச காலம் விடுதலையாவான். அதாவது, பரிசுத்தவான்களுடைய பாளையத்தினுடைய பிரியமான நகரத்தினுடைய விரோதிகளை, அதாவது, ஜீவனுள்ள தேவனுடைய சபையின் விரோதிகளை சாத்தான் விரோதமான நடபடிக்கைகளுக்கு தூண்டுவதை தேவனல் தடைசெய்யப்படமாட்டாது. பரிசுத்தவான்களுடைய பாளையத்திற்கு விரோதமான இந்த தாக்குதல், தேவனுடைய ஆலயத்தில் அதாவது கிறிஸ்தவ சபையில் அமர்ந்திருக்கும் அந்திக்கிறிஸ்துவிலிருந்து ருசிய நாட்டு பொதுவுடமைக்

கொள்கையர்வரை உள்ள சகல கிறிஸ்துவினுடைய விரோதிகளாலும் உண்டாக்கப்படுகிறது. எசேக்கியேல் 38, 39 அதிகாரங்களில் காண்டதுபோல, கோக், மாகோக் என்பதை பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள, ஜீவனுள்ள தேவனுடைய மெய்யான சபைக்கு எதிராக உள்ள எல்லா வல்லமையைக் குறிக்கும் அடையாள வார்த்தைகளாகும்.

இந்தத் தாக்குதல் எப்படி உண்டாக்கப்படுகிறது? தீயினாலும், பட்டயத்தினாலும் ஆன கொடூரமான உபத்திரவங்களால் மாத்திரம் அல்ல. தீயினாலும், பட்டயத்தினாலும் உண்டாகும் கேடுகளைக்காட்டிலும், அதிகக் கேடு கள்ளத் தீர்க்கதரிசிகளினால் சபைக்கு உண்டாகிறது. இதைச் சாத்தான் நன்கு அறிந்திருக்கிறான். கள்ளப் போதகர்கள் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் மையத்தின்மேல் தாக்குதலை உண்டாக்குகிறார்கள். உதாரணமாக, ''நாம் தேவனுக்குச் சத்துருக்களாய் இருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம்,'' என்பதை அவர்கள் படுகள உபதேசம் (Slaughter-house doctrine) என்றும், இரத்த இறையியல் (blood theology) என்றும் அழைக்கும் போது, அடிப்படை கிறிஸ்தவ உபதேசத்தையே தாக்குதல் செய்பவர்களாக இருக்கிறார்கள், நம்முடைய எல்லாப் பாவங்களுக்கான மன்னிப்பையும், நீதிமானாக்கப்படுதலையும், இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினாலேயே பெறுகிறோம் என்ற உண்மையை அவர்கள் மறுதலிப்பதால், நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தின் மையத்தையே அவர்கள் தாக்குகிறவர்களாக இருக்கிறார்கள். வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்பது கிறிஸ்தவ மதத்தின் அடிப்படைக் கொள்கையாகும் (2 தீமோத்தேயு 3:15, 2 பேதுரு 3;3, 4). இதை அவர்கள் மறுதலிக்கும் போது, அவர்கள் தேவனுடைய நகரத்தின் அடித்தளத்தை அழிக்கிறவர்களாகுகிறார்கள் (சங். 11:3. 1 தீமோத்தேயு 4:1; 2 தீமோத்தேயு 3:1-5; தீத்து 4:3,4).

நாம் விழித்திருப்பவர்களாக இருப்போமாக. நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்தின் அடையாளங்களை நிதானிக்கத் தெரிந்தவர்களாக நம்முடைய கண்களை திறந்திருப்போமாக. அந்தக் கொஞ்ச காலத்தின் அளவு: சாத்தான் விடுதலையாகவேண்டிய கொஞ்ச காலம் எவ்வளவு காலமாக இருக்கும் என்று ஒருவரும் சொல்லமுடியாது (அப்போஸ்தலர் 1:7; மத்தேயு 24:36-42; மாற்கு 13:32-37), ஏனென்றால, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்போலவும். ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது (2 பேதுரு 3:8). ஆனால், வெளிப்படுத்தின விசேஷம் 20:2, 3 வசனங்களில், நீண்ட காலத்தைக் குறிக்கும் ஆயிரம் வருஷங்களும், குறுகிய காலத்தைக் குறிக்கும் கொஞ்ச காலமும் ஒன்றுக்கொன்று வேறுபடுத்திக் காட்டப்பட்டிருப்பதால், இந்தக் கொஞ்ச காலம் என்பது, முன்னால் சொல்லப்பட்ட ஆயிரம் வருஷ காலத்தின் அளவு நிச்சயமாக இருக்கமுடியாது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. நம்முடைய கர்த்தரின் தெளிவான அறிவிப்பின்படி, முடிவு நாளையும், நாழிகையையும், பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள் (மத்தேயு 24:36-42; மாற்கு 13:32-37; அப்போஸ்தலர் 1:7). ஆயிரம் வருஷங்கள் என்பது ஒரு நீண்ட காலத்தைக் குறிக்கும் அடையாள எண்ணாகும். கிறிஸ்துவால் சாத்தான் கட்டப்பட்டு (மத்தேயு 12:29), அழிக்கப்பட்டு (எபிரேயர் 2;14), புறம்பே

தள்ளப்பட்டு (யோவான் 12:31), சுவிசேஷம் இந்த உலகத்திற்குள் அனுப்பப்பட்ட நாள்முதல், இந்த ஆயிரம் வருஷம் துவங்கியது. இந்த ஆயிரம் வருஷங்களும், சாத்தான் விடுதலையாகவேண்டிய கொஞ்ச காலமும் சேர்ந்து, புதிய ஏற்பாட்டுக் காலத்தை உருவாக்குகிறது. கிறிஸ்துவினுடைய பிறப்பில் தொடங்கி, நியாயத் தீர்ப்புநாள்வரை இது நீடிக்கின்றது. ஏனென்றால், பரிசுத்த நகரமாகிய கிறிஸ்தவ சபையிலே, சாத்தானுடைய கடைசித் தாக்குதல் நிகழ்ந்தவுடன், தேவனு நியாயத்தீர்ப்பு தொடரும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:9-15). இந்தப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில், மரித்தவர்களின் ஆத்துமாக்கள் உயிர்த்து, கிறிஸ்துவுடனேகூட பரலோக மகிமையில் அரசாண்டுகொண்டிருக்கிறார்கள் (வெளி. 20:4). பரலோகத்திலே உயிர்த்து, கிறிஸ்துவுடனேகூட அரசாண்டுகொண்டிருப்பதுபற்றிய நுட்பமான விவரங்களை நாங்கள் கொடுக்கமுடியாது. ஆனால் இந்த ராஜரீக மகிமை தற்போதுள்ள இந்தப் பூமியில் வெளிப்படவில்லை என்பது நமக்குத் தெரியும். இங்கே இருக்கும் வேதாகமப்பகுதி, கிறிஸ்துவோடு இருக்கும் பரிசுத்தவான்களைப் பற்றித்தான் பேசுகிறது. தேவன், பரிசுத்த பவுல் மூலமாக, "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடுகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்," என்று சொன்னார் (கொலோசெயர் 3:4). நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து நியாயத்தீர்ப்பு நாளிலே வெளிப்படுவார்.

இதே வெளிப்படுத்தின விசேஷம் 5-ம் அதிகாரம் 8-10 வசனங்களில் அந்த புஸ்தகத்தை அவர் வாங்கினபோது அந்த நான்கு ஜீவன்களும் இருபத்தி நான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் தூபங்களையும் பரிசுத்தவான்களுடைய ஜெபங்களையும் தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராய் இருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும்; பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியில் அரசாளுவோம் என்று புதிய பாட்டை பாடினார்கள்." என்று வாசிக்கிறோம். இந்த வேதப்பகுதியை சுட்டிக்காட்டி, மேலே சொல்லப்பட்டிருக்கும் வியாக்கியானத்திற்கு சிலர் மறுப்பு தெரிவிக்கலாம். இந்த வேதப் பகுதியினாலேயே தற்போதுள்ள இந்தப் பூமியில் அரசாளுவோம் என்று சொல்லப்படவில்லை. என்பதற்குப் போதுமான ஆதாரம் இருக்கிறது. இந்த வேதப்பகுதி, மூப்பர்களின் தற்போதைய நிலைமையையும், அவர்களுடைய எதிர்கால நிலைமையையும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறது. மூப்பர்களின் தற்போதைய நிலைமை: "எங்கள் தேவனுக்கு முன்பாக, எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்." மூப்பர்களின் எதிர்கால நிலைமை: "நாங்கள் பூமியிலே அரசாளுவோம்." இந்த எதிர்காலத்திற்குரிய பூமியில் அரசாளுகை தற்போதுள்ள இந்தப் பூமியில் நடைபெற மாட்டாது. ஆனால் இந்த அரசாளுகை, புதிய பூமியில் நடைபெறும். அதாவது, இந்த உலகத்தின் அழிவிற்குப் பின்னால், தேவனால் சிருஷ்டிக்கப்படும், புதிய பூமியில், இந்த எதிர்கால பூமியில் ஆளுகை நடைபெறும் (வெளி. 21:1). இதை, வெளி. 22:3-5 வசனங்களிலிருந்து அறிந்து கொள்ளுகிறோம். மத்தேயு 19:28ல், மறுஜென்ம காலத்திலே, மனுஷகுமாரன், தம்முடைய

மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும், நியாயம் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.'' என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு சொன்னார். நம்முடைய கர்த்தர் இங்கே சொல்லியிருப்பதும், மேலே சொல்லப்பட்டிருப்பதும் முழுமையாகப் பொருந்தியிருக்கிறது. இங்கே, நம்முடைய கர்த்தர் மறு ஜென்ம காலம் என்று சொல்லியிருப்பது, புதிய சிருஷ்டிப்பைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறார் என்று ஒவ்வொரு வாசகர்களும் எங்களோடு ஒத்துக்கொள்வார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். 2 பேதுரு 3:11-13 வசனங்களைப் படித்துப் பாருங்கள். இந்த வசனங்களில், நம்முடைய கர்த்தருடைய மறுவருகை, தற்போதுள்ள பூமியின் முடிவின் போதும், புதிய பூமி சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பும் வைக்கப்பட்டிருப்பதை நன்கு கவனித்துப்பாருங்கள். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களின், தற்போதைய பரலோக நிலையை, அதாவது கிறிஸ்துவோடு பரலோகத்திலுள்ள அவர்களின் பேரின்ப நிலையை வெளி. 20:4–6 வசனங்கள் சொல்லுகின்றன. இவர்கள் கர்த்தருக்குள் மரித்தவர்கள்.

மரணம் அடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை (வெளி 20:5). இது அவிசுவாசத்திலே மரித்தவர்களின் நிலைமையாகும். அவர்களுக்கு ஆவிக்குரிய உயிர்த்தெழுதலில் பங்கு இல்லை. அவர்கள் நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்துவோடு வாழவில்லை; அவர்கள் மரணத்தில் இருக்கிறார்கள். மரணம் அவர்களை மேய்ந்து போடுகிறது (சங்கீதம் 49:14). அவர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் (1 பேதுரு 3:19). நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்துவினுடைய ஆசீர்வாதமான ஐக்கியத்திலிருந்து, நித்தியமாக விலக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மரண நிலையில், புதிய ஏற்பாட்டுக்காலம் முடியும் வரை இருப்பார்கள். அதன்பிறகு நியாயத்தீர்ப்பு நாளிலே, அவர்களுடைய சரீரம் உயிர்ப்பிக்கப்படும். பிறகு நியாயாதிபதி அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு வழங்குவார், 11-15 வசனங்களில் விளக்கப்பட்டிப்பதுபோல.

வெளிப்படுத்தின விசேஷம் இருபதாம் அதிகாரம் சம்பந்தமான இந்த வியாக்கியானம், வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தைக்கும் இசைந்தாற்போல வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்த வியாக்கியானம் சரியே என்பதில் எங்களுக்கு முழு நிச்சயம் உண்டு. அதே சமயத்தில், ஆயிரம் வருஷ அரசாட்சிக்காரர்களின் வியாக்கியானம், இந்த விசயத்தைப்பற்றிச் சொல்லும், மற்ற தெளிவான வேதப்பகுதிகளோடு இசையாதிருப்பதோடல்லாமல், அவைகளோடு முரண்படவும் செய்கிறது. பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய வார்த்தைகளை விளக்கிக் காட்டுகிறார் என்பதை நாம் மனதில் கொள்வோமாக. வெளிப்படுத்தின விசேஷம் 20ம் அதிகாரம் மட்டும் அல்ல, உவம உருவகமான பாஷையிலே சொல்லப்பட்ட ஒவ்வொரு வேதப்பகுதியையும், வேதாகமத்திலுள்ள மற்ற பகுதிகளோடு ஒத்திருக்குமாறு வியாக்கியானம் பண்ணவேண்டும். ஏனென்றால், தேவன், தனக்குள் ஒருபோதும் முரண்பட்டுக்கொள்ளமாட்டார். தவறான எந்த வியாக்கியானமும், வேதாகமத்தை தெளிவில்லாததாக ஆக்குவதோடுமட்டும் அல்லாமல், வேதாகமத்தைப் புரட்டவும் செய்கிறது (2 பேதுரு 3:16).

# 'சீயோனே தீவிரி' என்ற கட்டுரையின் தொடர்ச்சி

வேத ஆராய்ச்சியாளர், மே/ஜூன் '83 ம் இதழில் வந்த இந்தக் கட்டுரையின் முதற்பகுதியை நீங்கள் படித்திருப்பீர்கள் என கர்த்தருக்குள் நம்புகிறோம். தயவுசெய்து இதைத் தொடர்ந்து வாசியுங்கள்.

ஹியூல்ஸ் என்பவர் தன்னுடைய புதிய வானமும் புதிய பூமியும் என்ற புஸ்தகத்தில், 160 ம் பக்கத்தில், கூறுவதுபோல, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள், "கர்த்தருடை வீடு," "பர்வதங்கள்," "சீயோன்," "திருப்தியாய்ப் புசித்து," "உயர்தர திராட்சரசத்தைப் புசித்தல்," "மரங்களின் கீழ் இளைப்பாறுதல்," போன்றவார்த்தைகளால் நிறைந்திருக்கின்றன. அதோடு பூமிக்குரிய செழுமைபற்றிய என்றென்றைக்கும் உள்ள பொதுவான காட்சிகளாலும் நிறைந்துள்ளன. இந்த ஆசீர்வாதங்கள் என்றென்றைக்கும் இருக்கும் என்று சொல்லப்படும் இந்த உண்மையே ஆயிரம் வருடம் என்று சொல்லக்கூடிய ஒரு குறிப்பிட்ட காலத்தைப்பற்றிய சிந்தனையையே தவிர்க்கிறது. ஆனால் புதிய ஏற்பாடு உண்மையான வியாக்கியானத்தை வெளிப்படுத்துகிறது. புதிய யுகத்தின் ஆவிக்குரியதின் மாதிரியாக, அடையாளச்சின்னமாகவே பழைய உலகப்பிரகாரமானவைகள் இருந்தன. தற்போது ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் தரிசிக்கப்படாமல் அனுபவிக்கப்படுகின்றன. ஆனால் புதிய வானம் புதிய பூமியில் எல்லாமே காணக்கூடியதாய் இருக்கும். அப்படிக் காண்பது பழைய ஒழுங்கின்படியான காரியங்களால் இராது. மறுரூபமாக்கப்பட்ட மகிமையான—உண்மையான ஆவிக்குரிய சிருஷ்டிப்பாய் அது இருக்கும்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றியே நாம் அதிகமாக சிந்திப்பதால், அதிகமான நேரங்களில் அவரது முதல் வருகையில் கொண்டுவரப்பட்ட அதிசயமான மாற்றங்களைப் பாராட்டத் தவறிவிடுகிறோம். தனிப்பட்ட ஆத்துமாக்களின் இரட்சிப்பை சுவிசேஷம் கொண்டுவருவதுமட்டுமல்ல, அதன்மூலம் உலகம் தலைகீழாய்த் திருப்பப்பட்டது என்றும் காண்கிறோம் (அப்போஸ்தலர் 17:6). தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதுபோல சீயோனிலிருந்து மீட்பர் வந்தபின் எதுவும் முன்போல இருக்கவில்லை. அந்த ஒளிக்குமுன் இருளும் சிறையிருப்பும் பறந்தோடின, அவருடைய பிரகாசத்தை வரவேற்ற ஜனங்களும் தேசங்களும் மிகுந்த செழுமை அடைந்தனர். தேவர்கள் அல்லாத தேவர்களையும், தவறான மதங்களையும் தெரிந்துகொண்டவர்கள், அறியாமை, அடிமைத்தனம், ஏழ்மையில் பூட்டப்பட்டிருந்தனர். இதையே இன்னும் அவர்களுடைய குருக்கள், ஆவிக்குரிய தலைவர்கள் மூலமாய் ஏற்றுமதிசெய்ய விரும்புகின்றனர்.

தற்காலத்தில், நாம் வாழும் இவ்வுலகம் ஒழுங்கில்லாமலும், கூக்குரலாலும், குழப்பத்தாலும் அதிகரிக்க, அதிகரிக்க, மனிதவர்க்கம் ஒரு மேலான இடத்தையும், தற்போதைய சமுதாயத்திலிருந்து முற்றிலும் ஒரு மாற்றத்தையும் எதிர்பார்த்து ஏங்குகிறது. உலக மக்களிடையே இதே ஏக்கம் அவர்களுடைய கற்ப

லைக்கேற்ற சூழ்நிலைகளில் எளிமையாய் வாழ்வதன்மூலம் வெளிப்படுகிறது, அல்லது. இப்பொழுதுள்ள சமுதாயத்திலுள்ள ஒழுங்குகள் மாற்றப்படவேண்டும் என்னும் காரியத்திலிருந்து வெளிப்படுகிறது. இதேபோன்ற ஆசைகளைத் தவிர்க்க முடியாத விசுவாசிகளுக்கு இவ்விதமான கற்பனைகளைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ளதான. மேலான இடத்திற்கு வானத்திற்குத் தப்பிச் செல்லுதலும் பின்பு குறைவில்லா நிறைசெப்பும் ஆயிரவருஷ அரசாட்சியும் அவர்களை ஆதரிக்க முன்வருகிறது.

ஒழுக்கமற்ற, பிரகாசிக்கப்பட்டிராத உலகிற்குரியவனுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. ஆகவே இதைத்தவிர, மேலான நம்பிக்கை அவனுக்குத் தெரியாது. ஆகவே அவன் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பதைத் தடுகக யாரும் இல்லை; ஆனால் தற்போதைய சுதந்தரத்திலும், மாருத நம்பிக்கையாகிய நித்திய புதிய வானம் புதிய பூமி ஆகிய புதிய ஏற்பாட்டின் சத்தியத்தில் மிதக்கும் விசுவாசி இவ்வித கற்பனைக்கப்பாற்பட்ட காரியங்களில் தன்னைச் செலுத்த அனுமதி இல்லை என்பது தெரிகிறது.

ஆனால் காலப்பிரிவினைக்கோட்பாட்டாளர்களின் கதைகள் கற்பனையான மாய உலகில் இருப்பதைக்காட்டிலும் அதிகமான காரியங்களில் நம்மை ஈடுபடுத்துகிறது. அவை கிறிஸ்துவின் முதலாம் வருகையைத் தரக்குறைவாக்குகின்றன. அதோடு, அவருடைய, பிதா இவருக்கு இருக்கவேண்டும் என்று விரும்பிய அந்தப் பூமிக்குரிய, அரசியல் ரீதியான சிங்காசனத்தையும், ராஜ்யத்தையும் அடையத் தவறினர் என்று கூறுகின்றனர். மனிதனுடைய முரட்டுப் பிடிவாதமான விருப்பம், தேவன் தன்னுடைய திட்டத்தை மாற்றி அவருடைய சித்தத்திற்கு எதிராய் அவருடைய குமாரனை சிலுவையில் அறைய அனுமதிக்கும்படிச் செய்தது என்று கற்பிக்கின்றனர். இயேசு அரசியல் புரட்சித் தலைவராய், தேசத்துரோகச் செயலைச் செய்யவே வந்தார் என்றும், ஆகவே அவர் சிலுவையில் அறையப்பட்டது சட்டப்படி நியாயமானதே என்றும் உட்பொருளாய்க் கூறுகின்றனர். தற்போதைய கிறிஸ்துவின் ஆட்சியையும், விசுவாசிகளுடைய உடன் ஆட்சியையும் அவர்கள் மறுக்கின்றனர். சபை தோல்வி அடைந்துவிட்டது என்றும், அது செய்யமுடியாத அந்தப் பணியை பின்பு தற்போதுள்ள அரசியல் ரீதியான இஸ்ரவேல் மார்காணம் நிறைவேற்றும் என்றும் உட்கருத்தாய்க் கூறுகின்றனர்.

உபத்திரவத்திலிருந்து தப்புதல் போன்ற தவறான வாக்குத்தத்தங்கள் ஆகிய கட்டுக்கதைகள் மூலமாக தனிப்பட்ட விசுவாசிகளை முதலிலேயே பக்குவமடையாதபடி செய்து, பின்பு கனியற்ற புத்தகங்களையும் வரைபடங்களையும் அதோடு பாலஸ்தீன படையெடுப்பு பற்றிய வரைபடங்களையும் நீண்ட காலம் படிக்க வைக்கின்றனர். இந்தவீணான செயல் விசுவாசியை பிடித்துக்கொள்வதால், அவனுக்கு தன் வாழ்க்கையில் கிறிஸ்துவின் சித்தமும் திட்டமும் என்ன என்பதை அறியவும், அதோடு வளர்ந்து பக்குவமடைந்து, கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாய் மாறவும் அவனுக்கு நேரம் இல்லாமல் போகிறது.

உண்மையில் புதிய ஏற்பாடு, கி. பி. 70ல் ஆலயமும் நகரமும் அழிக்கப்பட்டு, சிறைப்பிடிக்கப்பட்டு, ஜனங்கள் சிதறடிக்கப்பட்டதால் யூதருக்கு எதிராய்

தேவன் பழிவாங்குதல் உச்சநிலையை அடைந்துவிட்டது என்று போதிக்கிறது. ஆனால் இதே கட்டுக்கதைகள், அந்திக்கிறிஸ்துவின் கையினால் கொடிய தண்டனையை அடைவார்கள் என்று யூதரைத் தவருய்ப் பயமுறுத்துகின்றன,

தேவனுடைய பார்வையில் இனிமேலும் யூதர்கள், புறஜாதியர்கள் இவர்கள் மத்தியிலே எந்த வேறுபாடும் இல்லை என்ற பவுலின் போதனையை இதே கட்டுக்கதைகள் மங்கிப்போகச் செய்கின்றன. அவர்களுடைய வம்சமே எப்படியாவது அவர்களுடைய எதிர்கால இரட்சிப்பிற்கு உத்திரவாதமளிக்கிறது என்ற தவருன நம்பிக்கையிலே அவர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு கிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக்கொள்வதே இந்தக்காலத்தில் புறஜாதிகளுக்கு இருப்பதைப்போன்ற இவர்களுக்கான நம்பிக்கை என்று அவர்கள் விளங்கிக்கொள்ள இன்றும் தடையை உண்டுபண்ணுகிருர்கள்,

விசுவாசிகளைத் தற்போதைய காரியங்களில் ஈடுபடுத்துவதிலும், எதிர்காலக் காரியங்களில் ஈடுபடுத்துவதிலும் உள்ள நன்மைகளைப்பற்றி அனுபவசாலியான ஸ்குரு டேப் என்னும் பிசாசு, தன் மருமகன் ஒர்ம் உட் என்பவனுக்கு எழுதிய கடிதங்களை சி. எஸ். லூயிஸ் என்பவர் எழுதியுள்ளார் (அந்தப் பிசாசின் கடிதத்தில் விரோதியாய் இருப்பது தேவன்தான்). அவருடைய கடிதத்தின் பகுதிகள் (பக்கம் 76, 77 ல்) கூறுவது: ''மனிதர்கள் காலத்தில்தான் வாழ்கின்றனர். ஆனால் நம் எதிரி அவர்களை நித்தியத்திற்கென்று நியமிக்கிருர். ஆகவே அவர்கள் நித்தியத்திலும் அதோடு நிகழ்காலம் என்று சொல்லக்கூடிய அந்தக் குறிப்பிட்ட நேரத்திலும் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று விரும்புகிருர். ஏனெனில் தற்பொழுதுள்ள காலம்தான் நித்தியத்தைத் தொடுகிறது. இந்தக் கணத்தில்தான் நமது விரோதி முற்றிலும் மெய்ம்மையாய் வைத்துள்ள அந்தக் காரியத்திற்கு ஒத்த அனுபவத்தை மனிதர்கள் அடைகிருர்கள். அதில் மாத்திரம்தான் விடுதலையும் மெய்ம்மையும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே அவர், அவர்கள் நித்தியத்தோடு (அதாவது அவரோடு) அல்லது நிகழ்காலத்தோடு ஈடுபட்டு அக்கரை காட்டவேண்டுமென்றே விரும்புவார்......''

''அவர்களை நித்தியத்திலிருந்தும், நிகழ்காலத்திலிருந்தும் அகற்றுவதே நம் வேலையாகும். இதை மனதிற்கொண்டு சில சமயங்களில் நாம் (ஒரு விதவையையோ அல்லது மேதையையோ) ஒரு மனிதனைக் கடந்த காலத்தில் வாழச் செய்கிறோம். இது குறைந்த பயனுடையதே. ஏனெனில் கடந்த காலத்தைப் பற்றிய மெய்யான அறிவில் சிறிது அவர்களிடம் உள்ளது. ஆகவே அந்த அளவிற்கு அது நித்தியத்தைப் பிரதிபலிக்கிறது. அவர்களை எதிர்காலத்தில் வாழ வைப்பது அதிலும் மேலானது. உயிரியலின் தேவையே அவர்களுடைய உணர்வுகளையெல்லாம் முன்னமே அந்தத் திசையில் செலுத்துகிறது. ஆகவே எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையே நம்பிக்கையையும், பயத்தையும் தூண்டிவிடுகிறது. அப்படி அவர்களை அதைப்பற்றிச் சிந்திக்க வைப்பதில் உண்மையாக அவர்களை மெய்மையற்ற காரியங்களையே சிந்திக்க வைக்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரியாது. வார்த்தையிலேயே எதிர்காலம் என்பதுதான் நித்தியத்தைக் குறிக்காத வார்த்தையாகும்.''

நிகழ்காலம் மட்டுமே விடுதலையையும் மெய்மையையும் நமக்குக் கொடுத்தால் எதிர்காலம் என்பது சிறிதும் நித்தியத்திற்கு ஒப்பாய் இராமல் நம்மை மெய்மையற்ற காரியங்களை சிந்திக்க வைத்தால், ஏன் நாம் இப்பொழுதைய தேவனுடைய ராஜயத்தின் மெய்ம்மைகளுக்கு எந்தவித பாராட்டையும் அளிக்காமல், எதிர்காலத்துக் கற்பனையான உலக ராஜ்யத்திற்கு ஏன் மனதையும் விருப்பத்தையும் அளிக்கிறோம்.

எதிர்காலத்தை அறியும் ஆசையால் புறஜாதியர்கள் நிரப்பப்பட்டிருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனால் காலங்களும் வேளைகளும் பிதாவின் ஆதீனத்தில் இருக்கிறது என்பதை அறிந்த தேவ ஜனங்கள் ஏன் இந்த அறிவில் பாதுகாப்பாய், திருப்தியாய் இருக்கக்கூடாது? ''நாளைக்காக கவலைப்படாதிருங்கள் ......அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள் போதும்'' (மத்தேயு 6:34) என்றார் கிறிஸ்து. அதோடு நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே (யாக்கோபு 4:14) என்று யாக்கோபு கூறினார். ஏவப்பட்ட இந்தப் புத்திமதி இருந்தபோதும் அநேக விசுவாசிகளின் மனம் எதிர்காலத்தால் நிறைந்திருக்கிறது. எதிர்காலத்தின் நிகழ்ச்சிகளை அறிய உலகத்தார் சோதிடம், சாஸ்திரம் போன்றவைகளின் மேல் நம்பிக்கைவைப்பது பற்றி இவர்கள் வருத்தப்படுவது சரியானதாய் இருந்தும், இவர்களே எதிர்காலக் கோட்பாட்டாளர்களின் கோட்பாடுகளின் அடையாளத்தைத் தேடுகின்றனர்.

இணையற்ற வேத அறிவும் விளங்குதலும் இயேசுவிற்கு இருந்தபோதிலும், அவருடைய இரண்டாம் வருகையின் நேரத்தை அவரோ அல்லது தூதர்களோ அறியார்கள் என்று கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் கூறினார். காலப்பிரிவினைக்கோட்பாட்டாளர்களில் சிலர், இதைவிட மேலான விளங்குதல் அவர்களுக்கு உண்டென்று உரிமைகொண்டாடிக்கொண்டு மிஞ்சிப்போனால் அவருடைய வருகை 1988-ற்குள் இருக்கும் என்று நமக்குக் கூறுகின்றார். தற்கால அரசியல் ரீதியான இஸ்ரவேல் மாகாணம் 1948 ல் நிறுவப்பட்டதிலிருந்து 40 வருடத்திற்குள் (ஒரு சந்ததியின் காலம்), தானியேலின் 70-ஆம் வரமாகிய 7 வருடங்களின் எல்லாச் சம்பவங்களும் நிகழவேண்டுமென்று காரணம் கூறுகின்றனர். அது, அவர்களுடைய காலத்தின் முடிவின் எல்லையை 1988 ஆக திறுத்தும். அதோடு இரகசிய வருகை 7 வருடங்களுக்கு முன் நடைபெற வேண்டியிருப்பதால், இங்கு தெரியும் வண்ணம் அப்படி காலம் தாழ்த்தினால் கூட 1981, இரகசியமாய் எடுத்துக்கொள்ளப்படுதலின் கடைசித் தேதியாய் இருக்கிறது.

எதிர்காலத்தைப்பற்றிய இவ்வித அறிவுக்காய் ஏங்கவேண்டும் என்று வேத வசனத்தில் எங்கும் நமக்குக் கூறப்படவில்லை. அதற்கு மாறாய், தற்போதைய தேவனுடைய ராஜ்யத்தின் மெய்மையிலே, இப்பொழுது இங்கு இருக்கும் இந்த ராஜ்யத்திலே, கிறிஸ்து கல்வாரியிலே வெற்றி கொண்டதினால், ஒவ்வொரு கஷ்டமான பிரச்சனை, சூழ்நிலை இவற்றின் மேல் ஆட்சி செய்து, ஒவ்வொரு நாளாக வாழவேண்டுமென்று நமக்குக் கற்பிக்கிறது.

ஆனால் இப்பொழுதையும், இங்கேயையும் மறந்துவிடுங்கள். காலப்போக்கில் நடப்பதை நாங்கள் சொல்லவிடுங்கள் என்று எதிர்காலக் கோட்பாட்டாளர்

கூறுகிறூர்கள். அதோடு 150 ஆண்டுகளுக்கு முந்திய கட்டுக்கதைகள், முதல் நூற்றுண்டில் சபைக்கு ஏவுதலினுல் கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டிற்கு சமம் எனக் கூறுகிறூர்கள்.

இருப்பினும் அதிர்ஷ்டவசமாக, புராணம், கட்டுக்கதை போன்ற நாற்றத்தை அகற்றி, சத்தியம், மெய்ம்மை ஆகிய சுகந்த வாசனையைத் திரும்பவும் கொண்டுவர தேவனுடைய ஆவியின் பலத்த காற்று சபையில் வீசிக்கொண்டிருக்கிறது. இனிமேலும் சீனுய் மலையைத் தேடவேண்டாம் என்று தேவன் அவருடைய ஜனங்களிடம் கூறி (கலாத்தியர் 4:23-31; எபிரேயர் 12:18-21), மாருய் அவர்கள் சீயோனிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிடத்திற்கும் (எபிரேயர் 12:22) வந்திருக்கிறூர்கள் என்பதை உணரவேண்டுமென்று விரும்புகிறூர்.

தேவன் தம்முடைய நித்திய வாசஸ்தலத்திற்காகத் தெரிந்துகொண்டிருக்கும் சீயோன் சபையே, ''இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன். அதின் ஆகாரத்தை நான் ஆசீர்வதித்து வருவேன்; அதின் ஏழைகளை நான் அப்பத்தினுல் திருப்தியாக்குவேன்'' (சங்கீதம் 132:13-16) என்று அவர் கூறும்போது, அவர் சபையைப்பற்றித்தான் பேசுகிறூர்.

அவர்களுடைய மகிழ்ச்சியில் பரிசுத்தவான்கள், கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர் என்று ஆர்ப்பரிக்கின்றனர் (சங்கீதம் 48:1).

''வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும், சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்'' (சங்கீதம் 48:2) என்று ஆர்ப்பரித்துக்கொண்டு இருக்கிறூர்கள்.

''சீயோனைச் சுற்றி உலாவி, அதின் கொத்தளங்களை எண்ணுங்கள். பின் வரும் சந்ததிக்கு நீங்கள் விவரிப்பதற்காக, அதின் அலங்கத்தைக் கவனித்து, அதின் அரமனைகளை உற்றுப்பாருங்கள்'' (சங்கீதம் 48:12. 13) என்றும், அவர்கள் ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கின்றனர்.

அடுத்த சந்ததிக்கு நாம் உண்மைகளைக் கூறுவோமாக; கட்டுக்கதைகளை அல்ல.

# நான் ஏன் திருமுன்னுயிரக் கொள்கைக் காரன் (Premillennialist) அல்ல?

ஏனென்றால், இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகை ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டிருப்பதால்தான். இது புதிய ஏற்பாட்டுப் போதனைக்கு மாருக இருக்கிறது:

1) மத்தேயு 24:39ம் வசனத்தில், ''ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷ குமாரன் வருங்காலத்திலும் நடக்கும்,'' என்று இயேசு சொன்னர். ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போனதுபோல, இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் போது, எல்லா துன்மார்க்கரும் வாரிக்கொண்டு செல்லப்பட்டு விட்டால், யூகமாகச் சொல்லப்படும் ஆயிரம் வருஷங்களுக்குள் பிரவேசிக்கும்படியாக யார் விடப்படுவார்கள்?

2) II தெசலோனிக்கேயர் 1:7-10 வசனங்களில், ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், நீதியுள்ள ஆக்கினை செலுத்தும் படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது .............. அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்,'' என்று வாசிக்கிரேம். அப்படியானல், இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைக்குப் பிறகு தொடர்வதாக கூறப்படும் ஆயிரம் வருஷங்களுக்குள்ளும் அதற்கு மேலாக உள்ள கொஞ்ச காலத்திற்குள்ளும் பிரவேசிக்கும்படியாக துன்மார்க்கனில் யார் விடப்படுவார்கள்?

3) மத்தேயு 25:31-46 வசனங்களில், இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின் போது, வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் வெவ்வேருகப் பிரிக்கப்பட்டு, எல்லா வெள்ளாடுகளும், (யூதர் அல்லது புறஜாதியர்) நித்திய ஆக்கினையை அடையப்போவார்கள் என காண்கிரேம். அப்படியானல், ஆயிரம் வருஷங்களுக்குள் பிரவேசிக்கும்படியாகவும், உலகலாகிய பூமிக்குரிய யூத சாம் ராஜ்யத்தில் இருப்புக்கோலால் ஆளுகை செய்யப்படும்படியாகவும் யார் விடப்படுவார்கள்?

4) மத்தேயு 13:24-30; 36-43 வசனங்களில் உள்ள கோதுமை, களைகள் சம்மந்தமான உவமையில், ''......... மனுஷ குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்,'' என்று இயேசு சொன்னர். அப்படியானல், இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைக்குப்பின்பாக தொடர்வதாகச் சொல்லப்படும் ஆயிரம் வருஷங்களுக்கும் அதற்கு மேலாக உள்ள கொஞ்ச காலத்திற்குள்ளும் பிரவேசிக்கும்படியாக, பொல்லாங்களின் புத்திரரில் யார் விடப்படுவார்கள்?

இந்தக் காரணத்தாலும், இன்னும் வேறு சில காரணங்களாலும், நான் திருமுன்னுயிரக் கொள்கையை விசுவாசிக்கவில்லே. அதாவது, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பிறகு ஆயிரம் வருஷ அரசாட்சி தொடரும் என்ற கொள் கையை நான் விசுவாசிக்கவில்லே.

## நான் ஏன் ஒரு Amillennialist? [இந்தப் பூமியிலே ஆயிரம் வருஷ அரசாட்சி இல்லே என்ற கொள்கைக்காரன்]

1) வீட்டைப்பற்றிய, சிங்காசனத்தைப்பற்றிய, ராஜ்யத்தைப்பற்றிய தாவீதிற்கான வாக்குத்தத்தம், அவர் பிதாக்களோடு நித்திரை பண்ணும்போது நிறைவேற இருந்ததால் (2சாமுவேல் 7:12-17) இந்த வாக்குத்தத்தம் நிறைவேறி விட்டதாக பேதுரு அப்போஸ்தலர் 2:29-36 வசனங்களில் அறிவித்திருக்கிறார். திருமுன்னுயிரக் கொள்கைக்காரர்கள் அறிவிப்பதுபோல, இந்த வாக்குத்தத்தம் இனிமேல் நிறைவேறுவதற்காக இல்லே.

2) கிறிஸ்து இப்பொழுது தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பதாலும், கடைசி சத்துருவாகிய மரணம் பரிகரிக்கப்படும் வரை அங்கே தொடர்ந்து இருப்பதாலும் (எபிரேயர் 10:12,13; 1 கொரிந்தியர் 15:26). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது நிகழும் (1கொரிந்தியர் 15:51-58) இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, கடைசி சத்துரு பரிகரிக்கப் பட்டுவிட்டபின்பு, வேறு சத்துருக்கள் எப்படி எழமுடியும்?

3) வேதாகமம் ஒரே ஒரு சுவிசேஷம் தான் உண்டு என்று போதிப்பதாலும் (கலாத்தியர் 1:8,9), திருமுன்னுயிரக்கொள்கை போதிப்பது போல அநேக சுவிசேஷங்கள் இல்லாததாலும் (Scofield Ref. Bible - பக்கம் 1343). இப்பொழுதே இரட்சணிய நாளாக இருப்பதாலும் (2 கொரிந்தியர் 6:1,2; 2 கொரிந்தியர் 11:4). — இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பின்பு, இரட்சிப்பு இல்லே.

4) இந்தக்காலம் அநித்தியமானது என்றும், இனிவரும் காலம் நித்தியமானது என்றும் இயேசு கிறிஸ்து போதித்ததால் (லூக்கா.20: 34-36; 1 பேதுரு 4:7; எபேசியர். 1:21; 3:21)

5) பவுலும், பேதுரும், யோவானும், இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையைப்பற்றி சொல்லியிருக்கும் இடங்களில், அக்கினி சம்மந்தப்படுத்தப்பட்டிருக்கிறது (2 தெசலோனிக்கேயர் 1:7-10; 2 பேது. 3:7-12; வெளி. 20:9, 10). இயேசுகிறிஸ்துவின் அக்கினியோடுகூடிய இரண்டாம் வருகை, இந்த வானத்தையும் பூமியையும் துன்மார்க்கரையும் அழித்து, அவர்களே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும். அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாக்கி, அவர்களே நித்திய அழிவாகிய தண்டனையை அடையச் செய்தால், கர்த்தருடைய வருகைக்குப் பின்பு தொடர்வதாக யூகமாகக் கூறப்படும் ஆயிரம் வருஷங்களுக்குள்ளும், அதற்கு பின்பாகத் தொடரும் கொஞ்சகாலத்திற்குள்ளும் பிரவேசிக்கும்படியாக துன்மார்க்கரில் யார் மீதியாக விடப்படுவார்கள்?

6) நீதிமான்களின் உயிர்த்தெழுதல் கடைசி நாளில் நிகழும் என்று கிறிஸ்து போதித்தார் (யோவான் 6;39, 40, 44, 54; 11:24). அதே நாளில் துன்

ஞாயிறின்றேல் நியாயத்தீர்ப்பு வரும் (யோவான் 12:48). அப்படியானால், இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைக்குப் பின்பு தொடர்வதாகப் போதிக்கப்படும் ஆயிரம் வருஷங்களுக்குள் பிரவேசிக்கும்படியாக இங்கே பூமியில் யார் விடப்படுவார்கள்?

7) கடைசி எக்காளம் தொனிக்கும்போது, மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள் என்று 1 கொரிந்தியர் 15:52; வெளிப்படுத்தின விசேஷம் 11:15-18 வசனங்கள் அறிவிக்கின்றன. இது இயேசுகிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையின்போது நிகழும் (1 கொரிந்தியர் 15:51-53). அப்படியானால் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பின்பாக தொடர்வதாகக் கூறப்படும் ஆயிரம் வருஷங்கள் காலத்திலும் அந்த வேளை உள்ள வேறே காலத்திலும் மரித்தவர்களை உயிர்ப்பிக்க இன்னொரு கடைசி எக்காளம் தொனிக்குமா?

8) வேதாகமத்தில் எந்த இடத்திலேயும், ஆயிரம் வருஷ அரசாட்சியை எதிர்நோக்கியிருக்கும்படி நமக்குப் போதிக்கப்படவில்லை. ஆனால் 2 பேதுரு 3:13, 14 ல் உள்ள வாக்குத்தத்தத்தின்படி, புதிய வானம் புதிய பூமியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்தையும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கப்பட்டிருக்கிறது (தீத்து 2:13). புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைக்குப்பிறகு, புதிய வானத்தையும் புதிய பூமியையும்தான் வாக்குக்கொடுத்து வாக்களிக்கிறதேதவிர, ஆயிரம் வருஷ அரசாட்சியையும் அதைத் தொடர்ந்த வேறுகாலத்தையும் அல்ல.

9) வெளிப்படுத்தின விசேஷம் 20:5 ல் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் முதலாம் உயிர்த்தெழுதல் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலாகும். வெளிப்படுத்தின 20:12-15 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும் இரண்டாம் உயிர்த்தெழுதல் சரீரப் பிரகாரமானதாகும். வெளிப்படுத்தின 20:5 ல் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் முதலாம் உயிர்த்தெழுதல் சரீரப்பிரகாரமானது என்பதற்கு அங்கே எந்தவித அறிகுறியும் இல்லை. அதற்கு மாறாக, அதனுடைய அறிகுறிகளெல்லாம் ஆவிக்குரிய தன்மையைச் சுட்டுவதாகவே இருக்கின்றன. முதலாம் உயிர்த்தெழுதல், ஆவிக்குரியதேதவிர சம்பவிக்கக்கூடிய சரீரப்பிரகாரமானது அல்ல. "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." என்று இயேசு யோவான் 5:25 ல் சொன்னார். பின்பு 5:28, 29 ல், "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால், பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." என்று கூறி முதலாம் உயிர்த்தெழுதலையும் இரண்டாம் உயிர்த்தெழுதலையும் வேறுபடுத்திக்காட்டினார் இயேசு. முதலாம் உயிர்த்தெழுதலில் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள். கேட்காதவர்களைப்பற்றி என்ன? மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை (வெளிப்படுத்தின 20:5). இந்த கல்வேறு காலமுழுவதும், தேவனுடைய இரட்-

சிப்பைப் பெறத் தவறியவர்கள், ஆவிக்குரிய மரணத்தில் தொடர்ந்து இருக்கிறார்கள்; ஆனால் கேட்கிறவர்கள் பிழைக்கிறார்கள் (ஆவியிலே), முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களின் சிறப்பியல்புகள் என்ன? (1) அவர்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகின்றனர் (1 பேதுரு 2:9). (2) அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் (எபேசியர் 1:3). (3) அவர்கள் இரண்டாம் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் (யோவான் 10:28,29). (4) அவர்கள், தேவனுடைய, கிறிஸ்துவினுடைய ஆசாரியர்களாக ஆகிறார்கள். (5) அவர்கள் கிறிஸ்துவோடு ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (இந்த பூமியில் அல்ல, ஆனால் கிறிஸ்துவோடு).

# தானியேலின் 70 வாரங்கள்

தானியேலின் புஸ்தகம் 9-ம் அதிகாரம் 24-27 வசனங்களில் வரும், தானியேலின் 70 வாரங்கள் என்பது, வரலாற்றிலுள்ள மிகமுக்கியமான காலத்தை உள்ளடக்குகிறது. பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் புரிந்து கொள்வதற்கு, இந்தத் தானியேலின் 70 வாரங்களைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனென்றால், இந்தக்காலத்தில்த் தான், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே நடந்தார்; மனித வர்க்கத்திற்கு தேவனுடைய ஒப்புரவாகுதலின் செய்தியைக் கொண்டு வந்தார். இந்தப் பூமியிலே இதுவரை நடந்த எல்லாச் சம்பவங்களைக் காட்டிலும், அவர் சொன்னது, அவர் செய்தது, அவர் வாழ்ந்தது, அவர் மரித்தது, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது போன்ற சம்பவங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

இந்தக் காலத்தில் நிச்சயமாக மற்ற சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் அவைகள், கிறிஸ்து மேற்கொண்ட பணிக்கும், அவர் மனித வர்க்கத்தின் பாவத்தைப் போக்குவதற்காக உண்டாக்கிய ஒப்புரவாகுதலுக்கும் இணைந்து தற்செயலாக நிகழ்ந்தவைகளாகும். தானியேலின் 70 வாரங்களைப்பற்றி வேதவாக்கியங்கள் நிறையச் சொல்ல வேண்டியிருப்பதால், அதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமாக.

ஏலாவின் குமாரனாகிய ஓசெயா, இஸ்ரவேலின் மேல் ராஜாவாகி, ராஜ்ய பாரம் பண்ணிக் கொண்டிருந்த போது, இஸ்ரவேலின் வடபகுதி அசீரியர்களால் சிறைப்படுத்தப்பட்டது (2 ராஜாக்கள் 17:6-23). ஏறத்தாழ 136 ஆண்டுகளுக்குப் பின்பு யூதாவின் தென்பகுதி, பாபிலோனியர்களால் சிறைப்படுத்தப்பட்டது (2ராஜாக்கள் 25:1-21). எரேமியா தீர்க்கதரிசி, யூதாவின் சிறையிருப்பு 70 ஆண்டுகள் தான் நீடிக்கும் (எரேமியா 25:11,12; 29:10) என்றும், அதன்பிறகு அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்புவார்கள் என்றும் முன்னுரைத்தார். ஏசாயா தீர்க்கதரிசி, சிறைபடுத்தப்பட்டவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிச்செல்லும் விசயத்தில் கோரேஸ் ராஜா முக்கிய பங்கு வகிப்பார் என்று தீர்க்கதரிசனம் அறிவித்திருந்தார் (ஏசாயா 44:28; 45:1-4).

எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி பெர்சியாவின் ராஜாவாகிய கோரோசின் முதலாம் வருஷத்திலே, யூதாவினுடைய இஸ்ரவேலுடைய சிறைப்படுத்தப்பட்டவர்கள், அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பிச்செல்ல அனுமதிக்குமாறு கோரோஸ் ராஜா கட்டளையிட்டார் (2நாளாகமம் 36:22,23; எஸ்ரு 1:1-4).

கிருபையுள்ள இந்தக் கட்டளையின்படி, முதலில் செருபாபேல் என்பவரின் தலையின் கீழ் அநேக யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பினார்கள் (எஸ்ரு 2:1-70) அதன்பிறகு, எஸ்ருவின் தலைமையின் கீழ், இன்னொரு கூட்டத்தார் தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பினார்கள் (எஸ்ரு 7:1–26) அதன்பிறகு நெகேமியாவின் தலைமையின் கீழ், இன்னொரு கூட்டத்தார் தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பினார்கள் (நெகேமியா 2-ம் அதிகாரம்).

தங்கள் தேசத்திற்குள் நுழைந்தவுடன், யூதர்கள் தங்கள் ஆலயத்தையும், தங்களுடைய வீடுகளையும், எருசலேமின் அலங்கத்தையும் மறுபடியும் கட்டத் துவங்கினார்கள். உடனடியாக சமாரியாவில் ஏற்கனவே குடியிருந்தவர்களிடமிருந்து அவர்களுக்கு எதிர்ப்பு வந்தது. உடனடியாக, தங்கள் தேசத்திற்கு திரும்பிவந்த யூதர்கள், இவைகளைத் திரும்பக் கட்டுவதற்கு, தாங்கள் கோரோஸ் ராஜாவிடம் இருந்து அனுமதிபெற்று வந்திருப்பதாக ஆதாரம் காட்டினார்கள் (எஸ்ரு 4;3)

அதன் பிறகு, சகரியர். ஆகாய் போன்ற தீர்க்கதரிசிகளின் தூண்டுதலால், அந்த வேலை தொடர்ந்து நடந்தது. ஆனால் அவர்களுடைய சத்துருக்கள், அவர்கள் திரும்பக் குடியேறுதலையும், திரும்ப வீடுகளையும், ஆலயத்தையும், எருசலேமின் அலங்கத்தையும் கட்டுவதையும் தடைசெய்ய முயற்சி செய்தனர். எனவே நதிக்கு இப்புறத்திலிருக்கிற தத்னாய் என்னும் தேசாதிபதியும். சேத்தார் பொஸ்னாயும், நதிக்கு இப்புறத்திலிருக்கிற அப்பற்சாகியரான அவன் வகையராவும், ராஜாவாகிய தரியுவுக்கு ஒரு கடிதம் எழுதி, ''.. ...எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்ட, ராஜாவாகிய கோரோஸ் கட்டளையிட்டதுண்டோ என்று பாபிலோனில் இருக்கிற ராஜாவின் கஜானாவிலே ஆராய்ந்து பார்க்கவும், இந்த விசயத்தில் ராஜாவினுடைய சித்தம் இன்னதென்று எங்களுக்கு எழுதியனுப்பவும் உத்தரவாகவேண்டும்,'' என்று கேட்டுக்கொண்டார்கள் (எஸ்ரு 5:6-13).

ராஜாவாகிய தரியு இட்ட கட்டளையின்படியே, பாபிலோன் கஜானாவிலுள்ள தஸ்தீர அறையைச் சோதித்துப் பார்த்தபோது, மேதியா சீமையிலிருந்த அக்மேதா பட்டணத்தின் அரமனையிலே ஒரு சுருள் அகப்பட்டது. அந்தச் சுருளில் கோரேஸ் ராஜா பிறப்பித்த உத்தரவு இருந்தது. அதை வாசித்துப்பார்த்த, தரியு ராஜா ஒரு உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவு, கோரோஸ் ராஜா பிறப்பித்த உத்தரவை உறுதிப்படுத்தியது. இந்த உத்தரவு சம்மந்தமான விவரங்களை எஸ்ரு 6:6-12 வசனங்களில் நமக்கு எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

அதன்பிறகு, ராஜாவாகிய அர்தசஷ்ட இதே மாதிரி ஒரு கட்டளையை பிறப்பித்தார் (எஸ்ரு 7:11-26). இந்த மூன்று கட்டளைகளும் தான் (கோரேஸ், தரியு, அர்த சஷ்டா போன்ற மூவரின் கட்டளைகளும்), யூதர்கள் தங்கள் சொந்த தேசத்தில் குடியேறி அங்கே நிலைகொள்ள அடிப்படையாக இருந்தன.

தானியேலின் 70 வாரங்களைப் புரிந்து கொள்வதில் உள்ள ஒரு முக்கியமான விசயம் என்னவென்றால், பிரதம கட்டளையை கோரேஸ் ராஜாதான் முதலில் பிறப்பித்தார்; அதற்குபிறகு வந்த கட்டளைகள், கோரேஸ் ராஜாவின் கட்டளையை உறுதிப்படுத்தின என்பதே ஆகும். மற்றவிவரங்களை அறிவதற்காக, எஸ்ருவின் புஸ்தகத்தையும், நெகேமியாவின் புஸ்தகத்தையும் திரும்பத் திரும்பப் படித்துவிட்டு, பின்பு தானியேலின் 7 வ ரத் தீர்க்கதரிசனத்திற்கு நாம் திரும்புவோமாக.

தானியேலுக்கு இந்தக் கட்டளையைக் கொண்டுவந்த காபிரியேல் தூதன், இந்த எழுபது வாரங்கள் எதுபற்றியது என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறான். அது, ''உன் ஜனத்தையும்,'' ''உன் பரிசுத்த நகரத்தையும்'' பற்றியது. உன் ஜனத்தின் மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது, என்று காபிரியேல் தூதன் கூறியிருக்கிறான். தானியேலின் இந்த 70 வாரங்களைப்பற்றிய எந்த வியாக்கியானமும், அந்த ஜனத்தையும், எருசலேம் நகரத்தையும் உள்ளடக்கவேண்டும். அந்த ஜனத்தையோ, அல்லது அந்த நகரத்தையோ, விட்டுவிட்டு வியாக்கியானம் செய்தால், அது இந்தத் தீர்க்கதரிசனத்தின் புனிதத்தன்மையை கெடுத்தல் போலாகும்.

தானியேலின் 70 வாரங்களைப் புரிந்துகொள்வதற்கு, இன்னும் இரண்டு விசயங்களை அறித்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும்: அதனுடைய துவக்க காலமும், அதனுடைய முடிவுகாலமும் ஆகும். காபிரியேல் தூதன் அந்த 70 வாரங்களின் துவக்க காலத்தை அறிவித்திருக்கிறான். எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுத்தல் முதல், அந்த 70 வாரங்கள் துவங்குகின்றன (வசனம் 25). நாம் ஏற்கனவே பார்த்ததுபோல, இந்தக் கட்டளை கோரேஸ் ராஜாவால் பிறப்பிக்கப்பட்டு, தரியு ராஜாவால் உறுதிசெய்யப்பட்டது. நமக்குக் கிடைத்திருக்கும் நல்ல சான்று வலிமைகளிலிருந்து, கி.மு. 538-ல் தான் இந்தக் கட்டளை கோரேஸ் ராஜாவால் பிறப்பிக்கப்பட்டது என நாம் அறியவருகிறோம். இது, தானியேலின் 70 வாரங்களின் துவக்க காலத்தை நமக்குத் தெரிவிக்கிறது. மேலும் காபிரியேல் தூதன், இந்த 70 வாரங்களின் முடிவு காலத்தையும் நமக்கு அறிவித்திருக்கிறான். அது, கி.பி. 70-ல் தீத்துவால் ஏற்பட்ட எருசலேம் நகரத்தின் அழிவும், ரோமானியர்களால் ஏற்பட்ட யூத ஜனத்தின் சிதறுதலும் ஆகும்.

இந்த விபரங்களிலிருந்து, தானியேலின் 70 வாரங்களின் சம்பவங்கள், கி.மு. 538-ல் துவங்கி, கி.பி. 70;ல் முடிவடைகிறது என்று நமக்குத் தெரியவருகிறது. அதாவது, ஏறத்தாழ 608 ஆண்டு காலம். வேதாகமத்தின் எந்த இடத்திலும். இந்த 70 வாரங்கள் என்பது சரியாக 490 ஆண்டுகளைத்தான் அர்த்தப்படுத்துகின்றன என்று குறிப்பிடவில்லை. இந்த 70 வாரங்கள் என்பது, யூதர்கள் தங்கள் சொந்த தேசத்தில் இருக்கும்படியாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இரண்டாம் சந்தர்ப்பத்தின் காலத்தைக் குறிக்கும் அடையாளக்குறி ஆகும். தானியேலின் புஸ்தகம், இந்த வகையான அடையாளக் குறிகளால் நிறைந்து காணப்படுவதை நாம் காணலாம்.

மேலும் காபிரியேல் தூதன், இந்த 70 வாரங்களில் என்ன நிகழும் என்பதை விளக்கமாக அறிவித்திருக்கிறன். அங்கே 7 காரியங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவை: 1. மீறுதலைத்தவிர்க்கிறதற்கும் 2. பாவங்களைத் தொலைக்கிறதற்கும் 3. அக்கிரமத்தை நிவர்த்திபண்ணுகிறதற்கும் 4. நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் 5. தரிசனத்தையும் 6. தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும் 7. மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும். இவையல்லாமல், மேலும் மூன்று காரியங்கள் 25, 26 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவை: மேசியா வருவார், மேசியா சங்கரிக்கப்படுவார், நகரம் அழித்துப்போடப்படும், என்பவைகளே.

இந்தத் தீர்க்க தரிசனங்களெல்லாம், 70 வாரங்களில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் எழுத்தின்படியே நிறைவேறி விட்டன. வீதிகளும், அலங்கங்களும், இடுக்கமான காலங்களில் மறுபடியும் கட்டப்பட்டன; மேசியா (கிறிஸ்து) வந்தார்; அவர் சங்கரிக்கப்பட்டார்; நகரம் அழித்துப்போடப்பட்டது (அந்த 70 வார காலத்திற்குள்) மேலும், மேசியா (இயேசு கிறிஸ்து) அபிஷேகம் பண்ணப்பட்டார்; அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் (அக்கிரமத்தை நிவர்த்தி பண்ணினுர்).

தானியேல் 70 வாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்தில் ஒவ்வொரு பகுதியும் எழுத்தின்படியே நிறைவேறி விட்டன. ஒன்றுகூட மீந்திருக்கவில்லை.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபின்பு, 40 வருடங்கள் வரை, நகரம் அழிக்கப்படாதிருந்தது. அதற்கு ஒரு நல்ல காரணம் உண்டு. 70 வாரங்களின் காலம் இன்னும் முற்றுப் பெறவில்லை. ஆனுல் தானியேலின் 70 வாரங்களில் திட்டமிட்டதுபோல, நகரம் அழிக்கப்படும் என்று இயேசு சொன்னுர் (மத்தேயு 24:15-20; லூக்கா 21:20-24).

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, தானியேலின் 70 வாரங்களில் குறிப்பிடப்பட்டிராத வேறென்று நிகழும் என்று அவர் வற்புறுத்திக் கூறினுர்: அதாவது, பெந்தெகொஸ்தே நாளில் தீர்க்கதரிசியாகிய யோவேலினுல் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறுதல்; அதாவது பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தாவியின் வருகை சம்பந்தமான யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறுதல். இது நிகழும்வரை, அவர்களை நகரத்தில் காத்திருக்குமாறு இயேசு சொன்னுர்.

என்ன நிகழ்ந்தது என்று கவனியுங்கள். எருசலேம் நகரம் அழிக்கப்படுவதற்கு முன்பு, எருசலேம் நகரத்தைத்தான் அடித்தளமாக வைத்து சுவிசேஷம் பரவத் துவங்கியது. தேவன் மிக ஞானமாய்த் தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்துகிறர் என்பதற்கு இது ஒரு தெளிவான சான்று விளக்கமாகும். இயேசு சிலுவையில் அறையப்பட்டவுடனே, ஒருவேளை நகரமும் அழிக்கப்பட்டிருந்தால், அது, அப்பொழுதுதான் எருசலேம் நகரில் வளர்ந்துகொண்டிருந்த சபைக்கு ஒரு பேரிடராய் ஆகியிருக்கும். அப்படி ஆகும்போது, ஒருவேளை, சீஷர்கள் சுவிசேஷ புத்தகங்களையும், மற்ற நிருபங்களையும் (வெளிப்படுத்தின விசேஷப் புஷ்தகம் உட்பட) எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதற்கு முன்னமே கொலை செய்யப்பட்டிருக்கலாம். அப்படியல்ல! சர்வ ஞானமுள்ள நம்முடைய கர்த்தர் அந்த நகரம் அழிக்கப்படுவதற்கு முன்னமே (அந்த 70 வாரங்கள் கழிந்துவிடுவதற்குள்ளேயே) சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு போதுமான காலத்தைக் கொடுத்தார்.

இந்த நகரம் அழிக்கப்படவேண்டியதாயிருந்ததால், சிரியாவில் உள்ள அந்தியோகியா பட்டணத்திலே, புறஜாதியர் அஸ்திபாரம் துவங்கப்பட்டது. அதன் பிறகு பலமான அஸ்திபாரம் ஆசியா மைனரில் துவங்கப்பட்டது. அங்கேதான் வெளிப்படுத்தின விசேஷம் இரண்டு, மூன்று அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கும் ஏழு சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஏழு சபைகளுக்கும் எழுதிய நிருபங்களிலும், எருசலேமில் இருந்த சபையைப்பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. கிறிஸ்தவ தலைமை அலுவலகத்தில் ஒரு இடமாற்றம் ஏற்பட்டு இருந்தது.

தானியேலின் 70 வாரங்களை, வரலாற்றின் தீர்க்கதரிசன அளவு திட்டமாக எடுத்துக்கொண்டால், அதைப் புரிந்துகொள்வது மிகவும் சுலபமாகும். நம்முடைய விசித்திரமான தற்போக்கெண்ணங்களைத் திருப்தி செய்ய, நாம் நீட்டியோ அல்லது சுருக்கியோ பயன்படுத்தும் ஒரு ஜஜக்கோலாக அதை நாம் நோக்கவேண்டிய அவசியம் இல்லை. அல்லது 69ம் வாரத்தை வெட்டி, அதை 1900 ஆண்டுகளுக்கோ அல்லது அதற்கு மேலோ அந்தரங்கத்தில் ஊசலாடவேண்டிய அவசியம் இல்லை. அல்லது, 70ம் வாரத்தை, தூரத்திலுள்ள எதிர்காலத்தில் இனிமேல்தான் நிறைவேற இருக்கும் ஒன்றாகத், தனியாகப் பிரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

இந்த 70 வாரங்கள், அந்த ஜனத்தையும், அந்த நகரத்தையும் பற்றியதாகும். இந்தக்காலத்தின் வரையறை இஷ்டத்திற்கு விடப்பட்டதல்ல; ஆனால் உன் ஜனத்தின்மேலும், உன் பரிசுத்த நகரத்தின்மேலும் ...'' குறிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்ட சம்பவங்கள் அனைத்தும் காபிரியேல் தூதனால் எல்லைக்கோடு வரையப்பட்டு, அவன் சொன்னப்படியே அனைத்தும் நிறைவேறின. இந்தத் தீர்க்கதரிசனத்திலே கடைசியிலே வரும், எருசலேமின் அழிவு, இந்த 70 வாரக் காலத்திலுள்ள கால அட்டவணையில் நிறைவேற்றப்படும் என இயேசு உறுதிப்படுத்தினார்.

மறுபடியும் மத்தேயு 24:15-20 வசனங்களையும், லூக்கா 21:20-24 வசனங்களையும் வாசித்துப்பாருங்கள்.

# யூதர்கள் திரும்பவும் ஆலயத்தைக் கட்டுவார்களா?

சிகாகோ நகரில் இருக்கும், மூடி வேதாகமப் பள்ளியிலிருந்து வெளியாகிக்கொண்டிருக்கும், மூடி மாத இதழ் என்ற கிறிஸ்தவ பத்திரிக்கையின் சென்ற டிசம்பர் மாத வெளியீட்டில், ''யூதர்கள் திரும்பவும் அவர்களுடைய ஆலயத்தைக் கட்டுவார்களா?'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அந்தக் கட்டுரையின் ஆசிரியராகிய மால்கோம் கூச் என்பவர், அடுத்துவரும் பத்து ஆண்டுகளில் அது நடக்கும் என்று வாதாடியிருக்கிறார். தொல்பொருள் ஆராய்ச்சிக்காக, ஆலயத்தினுடைய தோண்டுதல்கள் சம்பந்தமான புனையா மெய்விளக்கத் திரைப்

படத்தைத் தயாரிப்பதற்காக, சென்ற கோடைக்காலத்தைச் சிலவழித்த கூச் அவர்கள்,'' அங்கே நான் கண்டவைகளும், நான் கேட்டவைகளும், கடந்த சிலமாதங்களாக நாங்கள் செய்த ஆராய்ச்சியும், அடுத்துவரும் பத்து ஆண்டுகளில், இஸ்ரவேலர் ஆலயத்தைத் திரும்பவும் கட்ட ஆரம்பிப்பார்கள் என என்னை நம்பும்படி செய்கிறது.'' என்று சொல்லியிருக்கிருர் (P 34). ஆனபோதிலும், ''இது என்னுடைய அபிப்பிராயம்தான். அநேக வேதாகம பண்டிதர்கள் இதை ஒத்துக்கொள்வதில்லை. சிலர் இந்த ஆலயம் ஒருபோதும் திரும்பக் கட்டப்படப்போவதில்லை என்று வாதாடுகிருர்கள்,'' என்றும் கூச் அவர்கள் கூறி இருக்கிருர்கள். வேதாகம ஆதாரமற்ற திருமுன்னுயிரக் கொள்கைக்கு ஆதரவு காண்பதற்காக எடுக்கப்பட்ட பல முயற்சிகளில் இதுவும் ஒன்ருகும்.

முதலாவதாக, ''யூதர்கள் அவர்களுடைய ஆலயத்தைத் திரும்பவும் கட்டுவார்களா?'' என்ற கேள்வியைக் கேட்பதும்கூட, அவர்களுடைய வேதாகம அறியாமையை வெளிப்படுத்துகிறது. அந்த ஆலயம் (மத்தேயு 21:13). அவர் திட்டம் போட்டு அதை கட்டிமுடிக்குமாறு செய்தார் (எபிரேயர் 8:5), ஒரு ஆவிக்குரிய முறையைக் கொண்டுவருவதற்காக, அதனுடைய நிகழ்முறைகளை ஒரு முன்னணிப் பள்ளியாக இருக்குமாறு அவர் ஒழுங்குப்படுத்தினர் (எபிரேயர் 10:1). யூதர்கள், தங்களுடைய பிதாக்களின் அக்கிரம அளவை இறுதியாக நிரப்பியபோது (மத்தேயு 23:32), தேவன் தன்னுடைய சேனைகளை (ரோமானியர்களை) அனுப்பி, எருசலேம் பட்டணத்தையும், அதிலிருந்த் ஆலயத்தையும் அழித்துப்போட்டார் (மத்தேயு 22:7). அங்கே, ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போனது (மத்தேயு 24:2).

புகழ்சான்ற திருமுன்னுயிரக் கொள்கைக்காரர்கள், ''ஆலயம் திரும்பவும் கட்டப்படும் என்றும், ஆயிரம் வருஷ அரசாட்சிக்காலத்தில், யூத சமய நடைமுறை ஒழுங்கு திரும்பவும் கொண்டுவரப்படும் என்றும்'' வாதாடுகிருர்கள். பழைய ஏற்பாட்டிலிருக்கும் சில தீர்க்கதரிசனங்களைப் புரட்டி இந்த மாதிரி அபிப்பிராயத்திற்கு அவர்கள் வந்துவிடுகிருர்கள் (எசேக்கியேல் 40:48; சகரியா 6:12, 13). கீழே தரப்பட்டுள்ள காரணங்களின்படி, இதை நாங்கள் ஒத்துக்கொள்ளமுடியாது.

1. கிறிஸ்துவினுடைய மரணம் பழைய ஏற்பாட்டு பலிகள் முறையை எப்பொழுதும் முழுமையாக பயனற்றுப்போகச்செய்தது (எபி. 9:10-15; 10:1-4,18).

2. கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு முறைக்கு திரும்பிச் செல்லாமல் இருக்கும்படியாக கடுமையாக எச்சரிக்கப்படுகிருர்கள் (கலாத்தியர் 3:23-25; 4:3-9; 5:1; கொலோசெயர் 2:16, 17; எபிரேயர் 10:11-14).

3. விசுவாச சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து அதன்மூலம் ஆபிரகாமின் சந்ததியானவர்களை இப்பொழுது தேவனுடைய இஸ்ரவேல் கொண்டிருக்குமாறு, கிறிஸ்து, யூதர்களுக்கும், புறஜாதியர்களுக்கும் நடுவிலே பகையாய் நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்திஞலே ஒழித்தார் (எபேசியர் 2:11-22; கலாத்தியர் 6:16; 3:26-29).

4. கிறிஸ்து ஆலயத்தைக் கட்டுவார் என்று சகரியா, சபையைப்பற்றி தான் தீர்க்கதரிசனமாக உரைத்தார் (மத்தேயு 16:18). இது ஆவிக்குரிய தேவனுடைய ஆலயம் ஆகும் (1கொரிந்தியர் 1:2; 3:16,17; எபேசியர் 2:19-22). ஆலயம் கட்டப்படுவதைத் தொடர்ந்து, கிறிஸ்து ஆசாரியராயும் இருக்கவேண்டியதாலும், இந்தப் பூமியிலே அவர் செய்யமாட்டார் என்ற உண்மையாலும் தெளிவுபடுத்தப்படுகிறது. கிறிஸ்து உலகப்பிரகாரமான ஒரு ஆலயத்தைக் கட்டுவார் என்று வேதாகமத்தில் எங்கும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்படவில்லை.

மேலும், இந்த ஆலயம் சம்மந்தமான ஆரம்ப திட்டத்தின் விவரங்கள் பல நூற்றாண்டுகளாக இழக்கப்பெற்றிருப்பதால், யூதர்களுக்கு அந்த ஆலயத்தைத் திரும்பக் கட்டுவது முடியாத காரியமாகும். மெக்கிளின்டாக் என்பவரும் ஸ்ட்ராங் என்பவரும், ''இந்த ஆலயக் கட்டிடம் சம்பந்தமான விபரங்கள் எங்களிடம் சிறிதளவுதான் உள்ளன; இந்த ஆலயத்தினுடைய சிற்பக்கலை சார்ந்த சரியான உருவமைப்பை நாங்களும் உருவாக்கவோ, அல்லது அதனுடைய சிக்கலான அமைப்புமுறைகள், திட்டங்கள் சம்பந்தமான அநேகக் காரியங்களைக் குறித்து நாங்கள் ஒரு முடிவிற்கு வரவோ, எங்களிடம் உள்ள விவரங்கள் போதுமானதாக இல்லை. இந்த விஷயம் சம்பந்தமாக நாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் முற்றிலுமாக தோல்வி அடைந்திருக்கின்றன; முக்கியமாக எங்களுடைய முயற்சிகள் முற்றிலுமாக தவருன கொள்கைகளில் தொடர்ந்து செயல்பட்டிருக்கின்றன,'' (Cyclopedia Vol. X, P. 255).

கி.பி. 363 ல், ரோமானிய சக்கரவர்த்தியாகிய ஜுலியன் என்பவர் அரசாட்சி செய்துகொண்டிருந்தபோது, யூதருடைய ஆலயம் திரும்பக் கட்டப்படுவது சம்பந்தமான ஒரு உற்சாகமான சம்பவம் நிகழ்ந்தது. நாஸ்திக வரலாற்று ஆசிரியரான எட்வர்டு கிப்பன் என்பவர், ''ஜுலியன், ஆலயத்தைத் திரும்பக் கட்டும் திட்டத்தைத் துவக்கி வைத்ததன் உண்மையான நோக்கம் என்னவென்ருல், தெய்வீக அதிகாரத்தால், மோசேயின் சமய நடைமுறை ஒழுங்கு கடந்து போயிற்று என்ற கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை தவறு என்று காட்டுவதற்காகத்தான்'', குறிப்பிட்டிருக்கிருர் ''As the christians were firmly persuaded that a sentence of everlasting destruction had been pronounced against the whole fabric of the Mosaic law, the Imperial sophist (Julian) would have converted the success of his undertaking into a specious arqument against the faith of prophecy and the truth of revelation. (Decline and fall of the Roman Empire Vol. 1 p, 778) ஆலயம் கட்டப்படுவது சம்பந்தமான இந்த துணிகர முயற்சியில் யூதர்கள் மிகவும் ஆர்வம் உள்ளவர்களாக இருந்தார்கள் என்று கிப்பன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இந்த வேலை நடைபெறுவதற்காக யூதர்கள் சாம்ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்து நன்கொடைகளை தாராளமாகக் கொடுத்தனர். வேலை துவங்கிய சொஞ்ச நாட்களுக்குள்ளே, எப்படியோ பயங்கரமான அக்கினி, அஸ்திபாரங்களுக்குப் பக்கத்திலேயே அடிக்கடி திடுமெனத் தோன்றி தாக்க ஆரம்பித்தன. இந்த கடுமையான அக்கினி அடிக்கடி தோன்றி வேலையாட்களை வாட்டி வதக்கினதால், கொஞ்சகாலத்திற்குள்ளாகவே அவர்கள் அந்த துணிகர முயற்சியைக் கைவிட்டுவிட்டனர், தற்செயலாக வேலை துவங்கிய 6 மாதங்களுக்குள்ளே ஜுலியனும் இறந்துவிட்டார்.